அச்சுவேலி, ச. குமாரசுவாமிக்குருக்கள் வெளியீடு.

# சைவப்பிரகாசிகை

## மூன்றும் புத்தகம்.

1950.

உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை

## மூன்றாம் புத்தகம்.


அச்சுவேலி

சரஸ்வதிவித்தியாசாலை மானேசர்

**சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்**

அவர்களால் எழுதப்பெற்று,

ஷை குருக்களவர்களின் புத்திரர்

சிவஸ்ரீ. வைத்தியேசுவரக்குருக்களால்



பருத்தித்துறை

**கலாநிதியந்திரசாலையில்**

பதிப்பிக்கப்பெற்றது.

நான்காம் பதிப்பு.

விகிர்தி௵ புரட்டாதி௴.

1950.



*Rights Reserved.*


விலை சதம் 60.



சிவபெருமான்.

# சத்தியரூபச் சிறப்புப்பாயிரம்

கோப்பாய், ஆசிரியகலாசாலை அதிபர்
ஸ்ரீமத். அ. பொன்னையா அவர்கள் எழுதியது

சைவப்பிரகாசிகை என்னும் பெயருடைய வாசக புத்தகங்கள் நல்ல இனிமையான செந்தமிழ்நடையால் எழுதி அச்சிடப்பட்டுள்ளன. இவற்றின் நூலாசிரியர் அச்சுவேலி பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்களாவர். சைவசாஸ்திரமகாபண்டிதராகிய இவர் சைவசமயஞானவளர்ச்சியும் பக்திவளர்ச்சியும் சிறுவர்க்குச் சித்திக்கும்படி தெய்வ சரித்திரங்களையும், சிவபத்தர், வேந்தர், புலவர் சரித்திரங்களையும் வகுப்புகட்கேற்ற படிமுறையாக வகுத்துக்கோத்து இவ் வாசகபுத்தகங்களை நயம்பட ஆக்கியுள்ளார். இப்புத்தகங்களை-முதற்புத்தகத்தை இரண்டாம் வகுப்பிற்கும், இரண்டாம்புத்தகத்தை மூன்றாம்வகுப்பிற்கும், மூன்றாம் புத்தகத்தை நாலாம்வகுப்பிற்கும் கதாவாசகபுத்தகங்களாகக் கொண்டு, சைவப்பாடசாலைகளிலே கற்பித்தல் உசிதமாகும். இவை சமயஉணர்ச்சியேயன்றி இலக்கியச்சுவையையும் உதிக்கச்செய்வனவாம்.

ஆசிரியகலாசாலை,
கோப்பாய்.
23-5-35.

அ. பொன்னையா.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| | முகவுரை. | பக்கம். |
| ௧. | வலம்புரிவிநாயகர் ... ... ... | ௧ |
| ௨. | திருக்கேதீச்சரம் ... ... ... | ௩ |
| ௩. | திரிகோணமலை ... ... ... | ௪ |
| ௪. | வாரிவனநாதர் ... ... ... | ௬ |
| ௫. | மட்டுவிற்சிவன்கோயில் ... ... ... | ௮ |
| ௬. | நடராஜப்பெருமான் ... ... ... | ௧௦ |
| ௭. | மாசிமகம் ... ... ... | ௧௨ |
| ௮. | பிரதோஷம் ... ... ... | ௧௪ |
| ௯. | சிவபெருமான் இயக்கவடிவங்கொண்டது ... | ௧௫ |
| ௧௦. | மகிடாசுரசங்காரம் ... ... ... | ௧௭ |
| ௧௧. | சுப்பிரமணியக்கடவுள் மரக்கலமேறி வந்தது ... | ௧௯ |
| ௧௨. | ,, ஆட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டது | ௨௧ |
| ௧௩. | உருத்திராக்ஷம் ... ... ... | ௨௨ |
| ௧௪. | திருநந்திதேவர் ... ... ... | ௨௩ |
| ௧௫. | மாணிக்கவாசகசுவாமிகள் ... ... ... | ௨௫ |
| ௧௬. | ,, ,, II ... ... | ௨௭ |
| ௧௭. | திருநாளைப்போவார் நாயனார் ... ... | ௨௯ |
| ௧௮. | சேக்கிழார் நாயனார் ... ... ... | ௩௧ |
| ௧௯. | விட்டுணு சிவபூசைசெய்தது ... ... | ௩௪ |
| ௨௦. | அரதத்தாசாரியர் ... ... ... | ௩௫ |
| | ,, II ... ... ... | ௩௭ |
| ௨௧. | கௌரி ... ... ... ... | ௩௯ |
| ௨௨. | அருணகிரிநாதசுவாமிகள் ... ... ... | ௪௧ |
| ௨௩. | காரைக்காலம்மையார் ... ... ... | ௪௩ |
| ௨௪. | பெரியோரைச்சேவித்தல் ... ... ... | ௪௬ |
| ௨௫. | சிவத்துரோகம் ... ... ... | ௪௮ |
| ௨௬. | தருமம் ... ... ... ... | ௫௦ |
| ௨௭. | ஆறுமுகநாவலர் ... ... ... ... | ௫௨ |
| ௨௮. | சரீராரோக்கியம் ... ... ... | ௫௪ |



உ

கணபதிதுணை.

# சைவப்பிரகாசிகை

## மூன்றாம் புத்தகம்.

### க. வலம்புரிவிநாயகர்.

கருணாநிதியாகிய விநாயகக்கடவுள் தமது கணங்களோடும் எவ்விடத்திலும் உலாவித் திருவிளையாடல் செய்யத் திருவுள்ளங்கொண்டார். அவர் பாதாளத்தில் உள்ளசர்ப்பங்களை எடுத்து ஆபரணமாகத் தரிப்பார். நவக்கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் இரத்தினமாலையாகத் தரிப்பார். கங்காநீரை எடுத்துத் திருமுடியிலே தரிப்பார்.

அக்கடவுள் ஒருதினம் நீர்விளையாட்டிற் காதல்கொண்டு, சமுத்திரம் யாவையும் உழக்கி விட்டுணு நித்திரைசெய்கின்ற பாற்கடலை அடைந்தார். அக்கடலின் நீர் முழுவதையும் தமது துதிக்கையினால் அள்ளினார். விட்டுணுமுதலிய தேவர்களும் அந்நீருடன் அவ

ருடைய துதிக்கையிற்புகுந்தார்கள். பாற்சமுத்திர நீர் வற்றியது. விநாயகக்கடவுள் தமது திருக்கரத்தினால் அள்ளிய நீரை மீளப் பூமியில் விடுத்தார். அந்நீருடன் விட்டுணு முதலியோர்களும் பூமியில் விழுந்தார்கள். விழுந்த அவர்கள் ஓரிடத்திலே திரண்டு, தாங்கள் துன்பமடைந்தமையைத் தங்களுள்ளே பேசினார்கள்.


விட்டுணு பூமியில் விழுந்தபொழுது, அவருடைய இடக்கரத்தில் இருந்த பாஞ்சசன்னியம் என்னுஞ் சங்கு வழுவிவிட்டது. விட்டுணு சங்கைக்காணாதவராய், அதை எங்குந்தேடினார். தேடியவிடத்து அதை விநாயகரது கணத்தலைவர்களுள் ஒருவர் வாயில் வைத்து ஊதுவதைக்கண்டார். உடனே விட்டுணு காஞ்சித்தலத்தை அடைந்து, அத்திகிரியில் வலம்புரிவிநாயகரைத் தாபித்துப் பூசைசெய்து, "அடியவருடைய இடரை அகற்ற அவதரித்தவரே! அடியேன் உம்முடைய துதிக்கையிற் புகுந்து வரப்பெற்றேன்; ஆகையினால் யான் பரிசுத்தமுடையவனாயினேன்; அப்பொழுது அடியேனது கரத்தினின்றும் நீங்கிய எனது சங்கு உம்முடைய கணநாதருகையில் இருக்கின்றது; அதை இப்பொழுதே தந்தருளுக" என்று இரந்தனர்.

விநாயகக்கடவுள் அவருடைய முன்னிலையிலே தோன்றிப் பூதகணத்தலைவருடையகையில் இருந்த பாஞ்சசன்னியம் என்னுஞ் சங்கைக்கொடுத்து, "இன்னும் உனக்கு வேண்டியது யாது" என்று அருளினார், "தலைவரே! இவ்வத்திகிரியில் எந்நாளும் வீற்றிருந்து, அடியார்கள் விரும்பியவரங்களைக் கொடுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். விநாயகக்கடவுள் "அவ்விதமாகுக" என்று கிருபை செய்தருளினார்.

திருநாவுக்கரசுநாயனார்.
[பண் - காந்தாரம்]

பலபலகாமத்தராகிப்பதைத்தெழுவார்மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியுங்கணபதியென்னுங்களிறும்
வலமேந்திரண்டுசுடரும்வான்கயிலாயமலையும்
நலமார்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை.

---



## ௨. திருக்கேதீச்சரம்.

பூர்வத்தில், ஆதிசேடனும் வாயுதேவனும் 'யானேவலியவன்; யானேவலியவன்;'' என்று தனித் தனியே தம்மை மதித்துப் பெருமிதங்கொண்டு, பெரும் போர்புரிவாராயினர். ஆதிசேடன் தன்னுடைய ஆயிரம் படங்களினாலே, மேருவின் சிகரங்களைச் சீக்கிரமாக மறைத்தான். வாயுதேவன் அதைக்கண்டு கோபங் கொண்டு, ஆதிசேடனுடைய படங்களைச் சிதறும்படி அடித்து, அம்மேருவின் மூன்றுசிகரங்களைப் பிடுங்கி எறிந்தான்.

அவற்றுள் முதலாவது சிகரம் திரிகூடம். அச்சி கரத்தை இந்திரனுடைய கட்டளைப்படி விசுவகன்மா இலங்கையாக இயற்றினன். இரண்டாவதுசிகரம் திருக் கேதீச்சரம். இது தேவத்தச்சனாகிய மகாதுவட்டா என்பவனாலே, சிவாலயமாகச் செய்யப்பட்டது. அங்கே சிவபெருமான் அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்தற் பொருட்டு எழுந்தருளியிருக்கின்றார். அத்தலத்தில் தேவர்கள் அர்த்தயாமபூசை செய்துவணங்குவார்கள்.

மகாதுவட்டா என்பவன் பாலாவிதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, கேதீச்சரநாதரது உபயதிருவடி களையுந் தியானஞ் செய்து, அப்பெருமானுக்கு அனேக

திருப்பணிகளையியற்றி, அங்கேயேயிருந்து, சரீரம் நீங்கப்பெற்றான். இக்காரணத்தால் திருக்கேதீச்சரத்துக்கு மகாதுவட்டாபுரம் என்னும் நாமம் பொருந்திற்று. மகாதுவட்டாபுரம் என்பது மாதோட்டம் என வழங்கப்படுகின்றது.

மூன்றாவதாகிய கந்தமாதன சிகரம் இராமேச்சரத்தின் சமீபத்திலே விழுந்து இன்றும் அந்நாமத்தோடு சிவத்தலமாக இருக்கின்றது.

திருக்கேதீச்சரம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரதும், சுந்தரமூர்த்திநாயனாரதும் தேவாரம் பெற்ற ஈழமண்டலத் தலமாகும்.

சுந்தரமூர்த்திநாயனார்

[பண் - நட்டபாடை]

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

---

## ௩. திரிகோணமலை.

வேறுமோர்காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் பகையுண்டாயது. ஆதிசேடன் சிவானுக்கிரகத்தினால் கைலாசகிரியின் கொடுமுடிகளைத் தனதுபடங்களினால் மூடினான். வாயுதேவன் கோபங்கொண்டு, மிக்கவேகத்துடன் அவ்வாதிசேடனை அடித்தான். ஆதிசேடன் சிவபெருமானது ஆஞ்ஞையினால் ஒருபடத்தை உயர்த்தினான். வாயுதேவன் பெருவலியுடையவனாய்த் திருக்கைலாசமலையின் தென்புறத்துள்ள மூன்று கொடுமுடிகளைப் பிடுங்கிக்கொண்டு தெற்குநோக்கிவந்தான். அவற்றுள் முக்கோணவடிவுள்ள நடுக்கொடுமுடியை உலக நன்மையின் பொருட்டு இலங்கையிலுள்ள சமுத்திரக்கரையிற் றாபித்தான். இம்மலை முக்கோணவடிவாய் இருத்தலினாலே திரிகோணமலை என்னும் நாமத்தைப் பொருந்தியது. வாயுவினாற்பிடுங்கப்பட்ட மற்றைய இரண்டு சிகரங்கள் திருக்காளத்தியும், திரிசிராப்பள்ளியுமாம்.

திருவாரூரில் இருந்த மனுநீதிகண்ட சோழமகாராசாவினுடைய புத்திரராகிய வரராமதேவசோழர் திரிகோணமலையையடைந்து சிவாலயத்திருப்பணிகள் பலவற்றைச் செய்வித்தார். சிவபெருமானுடைய கிருபையினலே அவருக்கு ஒரு சற்புத்திரன் பிறந்தான். பிறக்கும்பொழுது அவனுக்கு நெற்றியில் ஓர் கொம்பு இருந்தமையால், *குளக்கோட்டன் என்று நாமகரணம் வைக்கப்பட்டது. வரராமதேவசோழர் சிலகாலம் அரசாட்சி செய்து, சிவபதமடைந்தார். பின்பு குளக்கோட்டன் முடிசூட்டிச் செங்கோல் செலுத்தினன்.

அவன் வேதாகமங்களை ஓதியுணர்ந்தவன். வில்வித்தை குதிரையேற்றம் முதலியவைகளைக்கற்றுப் பாண்டித்தியமடைந்தவன். பொறுமையிலும் அறிவிலும் நீதியிலும் குறைவில்லாதவன். விபூதியிலும், உருத்திராக்ஷத்திலும், சிவனடியாரிடத்திலும் அன்புள்ளவன். அவன் கோணேசருக்குத் திருப்பணிகளை விசேஷமாகஇயற்றுவித்தான். சிவப்பிராமணரைக்கொண்டு, நித்தியம் நைமித்தியம் காமியம் என்னும் கிரியைகளைச் செய்வித்தான். கோயிலுக்காகிய வயல்களை விளைவிப்பதற்காக, கந்தளாய்க்குளத்தைக் கட்டுவித்தான். அவன் பின்புஞ் சிலகாலம் இருந்து அரசாண்டு, கோணேசருடைய திருவடித்தாமரைகளை அடைந்தான்.

திரிகோணமலை திருஞானசம்பந்தமூர்த்திநாயனரது தேவாரம்பெற்ற திவ்வியதலமாகும்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

பண் - புறநீர்மை.

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பேறு
கொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வும்
கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலையமர்ந்தாரே.

---

*குளம்—நெற்றி



## ௪. வாரிவனநாதர்.

சோழநாட்டிலே, திருவாஞ்சிப்பதியில் விரூபாக்கன் என்னும் ஒரு வைசியன் இருந்தான். அவன் அன்புடன் தினந்தோறும் சிவபூசை செய்பவன். சிவனடியார்களுக்கு அன்னவஸ்திரம் முதலியவற்றைக் கொடுப்பவன். சிவபெருமான் ஒருநாள் அவனது அன்பைச் சோதிக்குமாறு பிராமணவடிவந் தரித்து, அவனுடைய முன்னிலையில் வந்தருளினார். அவன் அப்பிராமணரை அழைத்துக்கொண்டுபோய் ஆசனத்திலிருத்திப் பூசித்து வணங்கினின்றான். அவர் வணிகனை நோக்கி, "நீ சிவனடியார்களுக்கு அன்னவஸ்திரம் முதலியவைகளைக் கொடுப்பதைக் கேள்விப்பட்டு, இங்கேவந்தோம்; எமக்கு வீடு வஸ்திரம் முதலியஒன்றும் இல்லை. எமது மனைவிமக்கள் முதலியோர் மூன்றுநாளாகப் பட்டினி இருக்கின்றார்கள்; வீடு முதலியவைகளை எமக்குத் தரவேண்டும்" என்றார். விரூபாக்கன் வீடுமுதலியவைகளை அவ்வந்தணருக்குத் தத்தஞ் செய்து கொடுத்தான். அவர் அவைகளை ஏற்றுக் கொண்டு மறைந்தருளினார். மறையவராக வந்தவர்

சிவபெருமானே என்று நினைத்து, அவரைத் தியானித்து வணங்கினன்.

பின்பு விருபாக்கன் தனது மனைவியாகிய விசாலாட்சியோடும் வேதாரணியஞ் சென்று கப்பலேறிக் காங்கேசந்துறையில் வந்து இறங்கினன். அங்கிருந்து கொடிகாமத்தில் வந்து குடியிருந்தான். அவன் தன்சீவியத்தின் பொருட்டுப் பால்வாங்கி, வியாபாரஞ்செய்ய நினைத்தான். ஒருநாள் அயற்கிராமத்துக்குப்போய், ஒருகுடம் நிறையப் பால் வாங்கிச் சுமந்துகொண்டு வந்தான். சாவகச்சேரியில் வரும் பொழுது, பாற்குடந்தவறி விழுந்து உடைந்தது. இரண்டாமுறையும் பால்வாங்கிக்கொண்டு போனன். அந்த இடத்திலே அக்குடமும் விழுந்து உடைந்தது. அவன் அவ்விடத்தில் நாற்புறங்களையும் கவனமாய்ப் பார்த்தான். கொடிகளின் நடுவில் ஒரு சிவலிங்கமிருப்பதைக் கண்டான். ஆனந்தபரவசனய்க் கண்ணீர் சொரிய நமஸ்கரித்தான். அத்தினம் முதலாக அச்சிவலிங்கப் பெருமானுக்குப் பாலபிடேகஞ் செய்து வந்தான்.

சிவபெருமான் விருபாக்கனுடைய அன்பை உலகத்தாருக்கு அறிவிக்க விரும்பி, மழையைஅதிகமாகப் பெய்வித்தார். வெள்ளம் அதிகமாகப்பெருகியது. விருபாக்கன் மனம் வருந்தினன். "நான்வழக்கமாகச் செய்துவரும் பாலபிடேகம் நடைபெருவிட்டால் இறந்துவிடுவேன்" என்று உறுதிசெய்துகொண்டான். சிவபெருமான் வைரவக்கடவுளை நோக்கி, "எமது அன்பன் இத்தினம் பூசை செய்யாவிட்டால் தனது உயிரை விடுவான். நீவிரைந்து சூலப்படையைச் செலுத்தி, நீரை வற்றச்செய்வாய்" என்றார். வைரவர் அவ்விதஞ் செய்தனர். அவ்விடம் பழமை போல இருந்தது. வாரிவனேசலிங்கம் வெளிப்பட்டுத்

தோன்றியது. விருபாக்கன் மனமகிழ்ச்சி கொண்டு, பாற்குடங்களை எடுத்து அபிடேகஞ் செய்து வணங்கினன்.

பின்பு தனக்குத்துணைசெய்த பல வைரவரை வணங்கி, அவரது கிருபையையும் பெற்று, பலகாலந் தவஞ்செய்து முத்தியடைந்தான்.

---

## ரு. மட்டுவிற் சிவன்கோயில்.

ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னே சோழமகாராஜாவின் புத்திரன் ஒருவன் கௌடதேசம்போய் சம்ஸ்கிருதபாஷையைக் கிரமமாகப்படித்து வந்தான். அவன் படிப்பை முடித்துக்கொண்டு, இமயமலையின் தென்பாரிசத்திலுள்ள திருக்கேதாரம் என்னும் தலத்துக்குப்போய், சுவாமிதரிசனம் செய்துகொண்டு இருந்தான். சிலமாதம் அங்கே இருந்து, திரும்பும்பொழுது மன்மதனாலே பூசிக்கப்பட்ட ஒருசிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். அவன் ஒரு கோயில்கட்டி, அவ்விலிங்கத்தை அங்கே பிரதிட்டைசெய்து வணங்கிவந்தான். அதன் பின்னர், பாண்டியராசனுடைய சினேகத்தைப் பெற்று, அவன்கீழிருந்து வில்வித்தை கற்றான்.

இப்படி அரசகுமாரன் வில்வித்தை பயிலுங் காலத்தில், யாழ்ப்பாணம் அரசனில்லாமல் சீரழிந்திருந்தது. திருநெல்வேலியில் இருந்த மழவராசன் என்னும் வேளாளப்பிரபு அவ்வரசகுமாரனை அழைத்துக் கொண்டு வந்தார். அரசகுமாரன் நல்லூரில் ஒருஅரண்மனை கட்டுவித்தான். அவ்வூரை ஒரு இராசதானியாக்கி, சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பட்டப்பெயரோடு செங்கோல் செலுத்தி அரசாட்சிசெய்திருந்தான்.

அவன் தனது அரண்மனைக்குள்ளே ஒரு கோயில் கட்டுவித்து, தான்முன்னரே வழிபட்டுவந்த மன்மதலிங்கத்தை இங்கேவருவித்து, அக்கோயிலிலே பிரதிட்டைசெய்து வணங்கி வருவானாயினன். அக்கோயில் **கைலாசநாதசுவாமிகோயில்** என்று சொல்லப்படும். அக்கோயிலின் கிழக்குக் கோபுரவாயிற் பிள்ளையார் கோயில் இப்பொழுதும் **கைலாசநாதபிள்ளையார் கோயில்** என்று வழங்கப்படுகிறது.

சிங்கை ஆரியச்சக்கரவர்த்தியின் மரபிலே, பலர் தோன்றி, அரசாட்சி செய்தார்கள். யாழ்ப்பாணம் பறங்கிக்காரராலே கைப்பற்றப்பட்டபின், அவர்கள் அந்த ஆரியச்சக்கரவர்த்தியின் அரண்மனையை இடித்தழிக்கத் தொடங்கினார்கள். தொடங்குவதற்கு இரண்டொரு தினங்களுக்குமுன் இதனைக் கைலாசநாதகோயிற் குருக்கள் கேள்விப்பட்டார். அவர்மனம் வருந்தி, சிவலிங்கத்தையும் தேவியையும் மட்டுவில் என்னும் தமதூருக்குக் கொண்டுசெல்ல விரும்பி, வண்டியில் வைத்து இழுத்தார். அது பாரமிருந்து, இழுக்கமுடியாமல் இருந்தது. அதனால் அவர் தேவி விக்கிரகத்தை அக்கோயிற் கிணற்றினுள்ளே இறக்கிவிட்டு, சிவலிங்கத்தை மாத்திரம் வண்டியில் வைத்து இழுத்துச் சென்றார். அவர் மட்டுவிலை அடைந்தவுடன், புதுப்பிப்பாரின்றிப் பழுதடைந்திருந்த ஒரு சிவன்கோயிற் கிணற்றுக்குள்ளே சிவலிங்கத்தை இறக்கிவிட்டுத் தமது வீட்டை அடைந்தார்.

சிலகாலத்தினுள்ளே அக்குருக்கள் தேகவியோகமாயினர். பறங்கியரது அரசாட்சிகாலமும் ஒழிந்தது. பின்பு ஒருநாள் பரமசிவன் அனுக்கிரகஞ்செய்தபிரகாரம் அச்சிவலிங்கம் தூர்ந்துபோய் அக்கிணற்றினின்றும் சிவபக்தரும் பிரபுவுமாகிய வன்னியசிங்கமுதலியாரால்* எடுக்கப்பட்டது. அவர் அவ்விடத்தி

லேயே ஒரு ஆலயங்கட்டி, சந்திரமௌலீசர் என்னும் திருநாமத்தோடு அவ்விலிங்கத்தையும், சாந்தநாயகி என்னும் திருநாமத்தோடு தேவியையும் பிரதிட்டை செய்தார்.

---



## ஸ்ரீ. நடராஜப்பெருமான்.

முன்னொருகாலத்தில் சிவபெருமான் தேவதாருவனத்திலுள்ள முனிவர்களுக்குத் தமது திருநடனத்தைக் காட்டியருளினார். விட்டுணுபின்னொருதினம் அந்த நிருத்தத்தை நினைந்தார். நினைந்து, சேடராகிய சயனத்தின்மீது துயில்செய்வதை யொழித்து "ஹரஹர சங்கர!" என்று உச்சரித்துச் சிவபெருமானைத் தியானித்தார். ஆதிசேடர் விட்டுணுவை வணங்கி, "நீர் இப்படிச்செய்தமையைச் சொல்லவேண்டும்" என்றார். விட்டுணு சேடரைநோக்கி, பரமசிவன் முனிவர்பொருட்டுச் செய்தருளிய நடனத்தை உபதேசித்தார்.

ஆதிசேடர் சிவபெருமானைத் தரிசிக்கவிரும்பி, விட்டுணுவிடத்தில் விடைபெற்றுக் கொண்டுபோய், கைலாசத்தின் பக்கலில்இருந்து தவஞ்செய்தார். சிவபெருமான் அவருடைய முன்னிலையிலே தோன்றியருளி, அவருக்கு தீக்ஷை செய்தருளினார். அதன்பின்பு, "தில்லைவனத்திலே மூலலிங்கம் இருக்கிறது;

அதற்குத் தெற்கே ஒரு சபையுண்டு; அங்கே நாம் நடனஞ்செய்வோம்; நீ முன் அத்திரிமுனிவருக்குப் பிள்ளையாய்ப் பதஞ்சலி என்னும் பெயரைப் பெற்றாய்; அவ்வடிவத்தோடு நாகலோகத்துக்குச்சென்று, அவ்விடத்திலிருந்து தில்லைவனத்தை அடைவாய்; அங்கே வியாக்கிரபாதன் தவஞ்செய்துகொண்டு இருக்கிறான்; நீயும் அவனுடன் இருக்குதி; நாம் எமதுநடனத்தைக் காட்டுவோம்'' என்று கூறி மறைந்தருளினர்.

ஆதிசேடர் பதஞ்சலி வடிவம்பெற்று, நாகலோகத்தையடைந்து, சிவபெருமானை வழித்துணையாகத் தியானித்துக்கொண்டு, அவ்விடத்தினின்றும் ஒரு குகைவழியாகஏறிப் பூமியை அடைந்தார். அவர் தில்லையை வணங்கி, வியாக்கிரபாதமுனிவரைக்கண்டார். அம்முனிவர் பதஞ்சலி முனிவரைச் சிவகங்கையில் ஸ்நானஞ் செவ்வித்து, திருமூலட்டானலிங்கத்தை வணங்கும்படி ஏவினர். அதன்பின் தாம் ஆன்மார்த்தமாகப் பூசித்துவந்த லிங்கத்தையும் வணங்கச்செய்து, அவருக்குக் கிழங்கு பழம் முதலியவற்றினலே விருந்து செய்வித்தார். பதஞ்சலிமுனிவரும் ஒருசிவலிங்கத்தை ஆன்மார்க்கமாகத் தாபித்தார். அவர்கள் இருவரும் "தேவரீரது நடனத்தைத் தரிசிப்பித்தருளுக" என்று பிரார்த்தித்து, எண்ணில்லாதகாலந் தவஞ்செய்தார்கள். நடனத்தைத் தரிசிக்கும்படி தவஞ்செய்திருந்த மூவாயிரம் முனிவர்களும் அவர்களுடன் சேர்ந்தார்கள்.

இப்படி நிகழும்காலத்திலே, தைப்பூசமும், பூரணையும், வியாழக்கிழமையும், சித்தயோகமும் கூடிய தினம் வந்தது. சூரியன் உச்சியை அடைந்தான். வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலிமுனிவர் என்னும் இருவரும் தமதுநடனத்தைத் தரிசிக்கும்படி சிவபெருமான் ஞானக்கண்ணைக் கொடுத்தருளினர். அவர்கள் ஆணவம் நீங்கித் திருநடனத்தைத் தரிசித்துப் பேரானந்தம்

அடைந்தார்கள். பிரமா விட்டுணு முதலிய தேவர்களும், மூவாயிரம் முனிவர்களும் பிறரும் சிவபெருமானுடைய கிருபையால் திருநிருத்தத்தைத் தரிசித்தார்கள்.

சிவபெருமான் வியாக்கிரபாத முனிவரையும், பதஞ்சலிமுனிவரையும் நோக்கி "நீங்கள் விரும்பிய வரங்களைச் சொல்லுங்கள்" என்றருளினர். வியாக்கிரபாதர் "யான் சிவாகமவிதிப்படி பண்ணுகின்ற பூசையை ஏற்றருளவேண்டும்" என்றார். பதஞ்சலிமுனிவர் இச்சபையிலே "இன்றுமுதல் எக்காலமும் தேவியாருடன் திருநடனஞ் செய்தருளவேண்டும்" என்றார். சிவபெருமான் "அவ்விதமே ஆகுக" என்று கிருபை செய்து, மற்றையோர்களுக்கும் அவ்வவர் விரும்பிய வரங்களைக் கொடுத்தருளினர்.

---

## எ. மாசிமகம்.

மிகப்பழைய காலத்திலே ஒரு அரசன் இருந்தான். அவன் மிகக் கொடியவன். அவனை வெல்லுவதற்கேற்ற உபாயத்தைச் சொல்லும்பொருட்டு, வருணதேவனிடத்தில் அவனுடைய குரு இருளிலே வந்தார். வருணன் அவரைப் பகைவனென்று நினைத்துத் தனது பாசத்தைவீசினன். உடனே குரு இறந்தார். குருவைக்கொன்ற கொலைப்பாவத்தினல் ஒரு பிசாசு வடிவந்தோற்றியது. அது அவனை இரண்டுகால்களோடு இரண்டு கைகளும்பொருந்த, கழுத்தோடு கூடும்படி கட்டிச் சமுத்திரத்தினுள்ளே கொண்டுபோய்விட்டது. வருணன் நெடுங்காலமாகத் துன்பத்தை அனுபவித்துக்கொண்டு, அங்கே கிடந்தான். அதை நீக்க ஒருவராலும் முடியாதாயிற்று.

பூமியிலுள்ளவர்களும் தேவர்களும் சிவபெருமானுடைய திருமுன்னிலையை அடைந்து, "வருணனுடைய துன்பத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பித்தார்கள். சிவபெருமான் சமுத்திரத்துக்கு எழுந்தருளி, வருணனுடைய கட்டை அறுத்தருளினார். வருணன் எழுந்து சிவபெருமானை வணங்கி, "மாசிமகமாகிய இத்தினத்திலே, இத்துறையில் ஸ்நானஞ்செய்தவருடைய பாசத்தை நீக்கி, அவர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளல் வேண்டும்; இத்துறையில் தேவரீர் எழுந்தருளுதலும் வேண்டும்" என்று பிரார்த்தித்து வரங்களைப் பெற்றான்.

இந்தச் சரித்திரத்தை வ்யாக்ரபாதமுனிவர இரணியவர்மச் சக்கரவர்த்திக்குச் சொன்னார். அவர் மாசிமகம் வர, சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குக் கொடியேற்றுவித்தார். தேவர்களும் முனிவர்களும் பிறரும் வந்து திருவிழாவைத்தரிசித்துக் "கனகசபைக்குத் தலைவரே! அருள்செய்க" என்று வேண்டினார்கள்.

தேவர்கள், சிவபெருமான் சமுத்திரத்துக்கு எழுந்தருளும் வழியை அலங்காரஞ் செய்தார்கள். சிவபெருமான் சமுத்திரத்துக்கு எழுந்தருளினார். எழுந்தருளுவதைப் பாசக்கட்டுநீங்கிய வருணன் கண்டு எதிர்கொண்டு நமஸ்கரித்தான். சிவபெருமான் வருணனது பாசத்தை நீக்கி அருளிய துறையிலே திருமஞ்சனஞ் செய்து அடியார்களுக்கு அனுக்கிரகித்துக் கனகசபையினுள்ளே புகுந்தருளினார்.

பாசமறுத்த துறை சிதம்பரத்துப் பத்துத்தீர்த்தங்களுள் ஒன்று. மாசிமகத்தில் தீர்த்தோற்சவம் இப்பொழுதும் நடைபெற்று வருகிறது.

திருஞானசம்பந்தர்.
[பண்-சீகாமரம்.]

மடலார்ந்தெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
அடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணுதேபோதியோபூம்பாவாய்.

---

# அ. பிரதோஷம்.

அவுணர்களும், தேவர்களும் ஒருவரோடொருவர் எதிர்த்துப் பலகாலம் போர்புரிந்தார்கள். இரு திறத்திலும் பற்பலர் விரைவில் இறந்தார்கள். அவர்கள் போரைவிடுத்து, பிரமாவை அடைந்து வணங்கி "நாங்கள் பலநாள் இறவாமலிருந்து யுத்தஞ் செய்யும்படி பாற்கடலைக்கடைந்து, அதிலுள்ள அமிர்தத்தை எடுத்துத்தந்தருளும்" என்று வேண்டினார்கள்.

பிரமதேவர் அவர்களுடன் பாற்சமுத்திரத்தை அடைந்து, விட்டுணுவைத்துதித்தார். அவர் "நீங்கள் இங்கே வந்தகாரணம் என்னை?" என்றார். பிரமா தேவர்களும் அவுணர்களும் வேண்டிக்கொண்ட குறையைச் சொல்லினார். விட்டுணு பாற்கடலைக் கடையும்படி அவர்களுக்குக் கற்பித்தார். மந்தரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவுங்கொண்டு தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது வாசுகி பொறுக்கமாட்டாது மயங்கி விஷத்தைக் கக்கியது. பாற்கடலும் விஷத்தை உமிழ்ந்தது.

விட்டுணு முதலிய தேவர்கள் அதனைக்கண்டு அஞ்சி ஓடுவாராயினர். அந்தநஞ்சு அவர்களை வலமும் இடமுமாக மறித்துத் தொடர்ந்தது. தேவர்கள் திருக்கைலாசத்திற்சென்று, இடபதேவருடைய சமீபத்திற் போய் ஒளித்து நின்று, சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தார்கள்

சிவபெருமானுடைய திருவருளினால், அவரது திருமருங்கிலே தொண்டுசெய்தொழுகுகின்ற சுந்தரர் அவ்விஷத்தைப் பற்றிக்கொண்டுவந்து கொடுத்தார். சிவபெருமான் அவ்விஷத்தை இடபதேவருடைய இரண்டு கொம்பினடுவேயிருந்து திருக்கரத்திலேற்று உட்கொண்டருளினார். அது திருமிடற்றிற் சென்றது. எம்பெருமான் அதனை அங்கே நிறுத்தியருளினார். தேவர்கள் துன்பம் நீங்கி மகிழ்ச்சியடைந்தார்கள். சிவபெருமான் அக்கொம்பினடுவே நின்று திருநிருத்தஞ் செய்தருளினார். அக்காலமே பிரதோஷகாலமென்று சொல்லப்படும்.

சனிக்கிழமையும், திரயோதசித்திதியுஞ் சேர்ந்து வருந்தினத்தில் பாதிச்சூரியன் மறையும் அந்திக்காலத்தில் விடத்தை அமுதுசெய்தருளினார். ஆதலாற் சனிப்பிரதோஷம் விசேடமாம்.

பிரதோஷவிரதத்தை அனுட்டிப்பது உத்தமம்.

திருநேரிசை.

வடங்கெழு மலைமத்தாக வானவ ரசுர ரோடு
கடைந்திட வெழுந்த நஞ்சங் கண்டுபன் மேவராஞ்சி
அடைந்துநுஞ் சரணமென்ன வருள்பெரி துடைய ராகித்
தடங்கட னஞ்ச முண்டார் சாய்க்காடு மேவினாரே.

---

## சு. சிவபெருமான் இயக்கவடிவங் கொண்டது.

முற்காலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்தது. அந்தயுத்தத்திலே அசுரர்கள் வெற்றி அடைந்தார்கள். பின்னர், யுத்தத்திலே தேவர்கள் சிவபெருமானது கிருபையினாலே வெற்றி பெற்றார்கள். அசுரர்கள் அடியோடு அழிந்தார்கள்.

தேவர்கள் தாங்கள் வெற்றிபெற்ற களிப்பினாலே அகங்காரங் கொண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே புகழ்ந்து யுத்தத்திலே வெற்றிவந்ததற்குக் காரணம் தாமே என்று கூறினார்கள். பின்பு கெறுவத்தினாலே சிவபெருமானையும் மறந்தார்கள்.

கிருபைக்கடலாகிய சிவபெருமான் தேவர்களுடைய அகங்காரத்தை நீக்கியருளுவதற்காக ஒரு அழகிய இயக்கவடிவத்தைக்கொண்டு, தேவர்கூட்டத்தின் நடுவே தோன்றினார். தோன்றிய கடவுள் அத்தேவர்களது முன்னிலையிலே ஒரு துரும்பைநட்டு, "இந்தத் துரும்பைத் தாணிக்கவல்லவனே அசுரர்களைக் கொன்றவீரன்" என்றார்.

இந்திரன், பிரமா, விட்டுணு முதலியதேவர்கள் எல்லோரும், தங்கள் தங்கள் படைக்கலங்களை அத்துரும்பின்மீது செலுத்தி, அதனை அசைக்கவும் வலிமை இல்லாதவர்களாய், செருக்கு நீங்கினார்கள். தேவர்கள் இயக்கரூபங்கொண்ட சிவபெருமானைப் பார்த்து "நீ யாவர்" என்றார்கள். உடனே அவ்வியக்கர் மறைந்தருளினார். அப்பொழுது, உமாதேவியார் தேவர்களது முன்னிலையிலே தோன்றினார். தேவர்கள் வணங்கினார்கள். உமாதேவியார் "இயக்கவடிவங் கொண்டு எழுந்தருளி வந்தவர் சிவபெருமானே" என்று உணர்த்தி மறைந்தருளினார்.

தேவர்கள் காஞ்சிபுரத்தை அடைந்து, தங்கள் அகங்காரத்தை நீக்கிய சிவபெருமானைப் பூசித்து, இஷ்டமான வரங்களைப் பெற்றார்கள்.



## ௰. மகிடாசுரசங்காரம்.

சிருட்டிகர்த்தாவாகிய பிரமாவும், திதிகர்த்தாவாகிய விட்டுணுவும் பகைத்து, பலகாலமாக யுத்தஞ் செய்தார்கள். இப்படி யுத்தமானது நடக்க, பிரமதேவர் மகிடாசுரன் என்பவனைப்படைத்து, விட்டுணுவை எதிர்க்குமாறு அனுப்பினர். விட்டுணுவும் உடனே, புலிமுகன் என்பவனை உண்டாக்கி, பிரமதேவரை எதிர்க்குமாறு விடுத்தார்.

பிரமா விட்டுணு ஆகிய இருவரும் தம்மை எதிர்த்துவந்த இரு அசுரர்களோடும் யுத்தஞ்செய்து ஆற்றாதவர்களாயினர். உலகம்முழுவதும் அசுரர்களாலே துன்பமெய்தி வருந்தின. விட்டுணுமுதலிய தேவர்கள் திருக்கைலாசமலையை அடைந்து சிவபெருமானை வணங்கி, அசுரர்களது கொடுமைகளை விண்ணப்பித்தார்கள்.

பரமசிவன் தமது வாமபாகத்தில் இருக்கும் உமாதேவியாரை நோக்கினர். நோக்கியபொழுது, உமையம்மையாரது திருமுகத்தினின்றும், துர்க்காதேவி தோன்றினர். சிவபெருமான் துர்க்கையைப்

பார்த்து, "மகிடன் புலிமுகன் என்னும் இரண்டு அசுரர்களாலும் தேவர்கள் துன்பம் அடைகின்றார்கள். ஆகையால் அவ்வவுணர்களைக் கொன்று, தேவர்களை அனுக்கிரகித்து வரக்கடவாய்" என்று கட்டளையிட்டருளினர்.

துர்க்காதேவி விடைபெற்றுக் கொண்டு சென்று யுத்தகளத்தையடைந்து, புலிமுகனைச் சங்கரித்தார். பின்பு மகிடனோடு எதிர்த்தார். மகிடன் கோபித்துப் பலகாலம் யுத்தஞ்செய்தான். துர்க்காதேவி தமது திருக்கரத்திற் பொருந்திய வாட்படையினால் அவனுடைய தலையைவெட்டினர். இரத்தம் ஆறுகப்பெருக, வெட்டிய *மகிடத்தலை விரைந்தெழுந்து போர்செய்தது. துர்க்காதேவி சூலத்தை எடுத்து, எருமைத்தலையின் உச்சியிலே குற்றி, அதனைத் தமது திருவடியினாலே மிதித்தருளினர்.

தேவியாருடைய திருவடிபட்டவுடனே, மகிடன் எருமைத்தலைநீங்கி, பலவிதமாகத் தோத்திரஞ்செய்தான். தேவியார் அவனுக்கு அனுக்கிரகஞ்செய்து, அவனைச் சிவகணங்களுக்குத் தலைவனாக்கி; திருக்கைலாசமலையை அடைந்தார்.

## திருநாவுக்கரசு நாயனார்.

[ திருத்தாண்டகம். ]

மான்றாலுமறிவரியவரதர்போலு
மறவாதார்பிறப்பறுக்கவல்லார்போலும்
நாலாயமறைக்கிறைவரானார்போலும்
நாமவெழுத்தைஞ்சாயநம்பர்போலும்
வேலார்கைவீரியைமுன்படைத்தார்போலும்
வியன்வீழிமிழலையமர்விகிர்தர்போலும்
ஆலாலமிடற்றடக்கியளித்தார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே.

---

* மகிடம்—எருமை.



## கக. சுப்பிரமணியக்கடவுள் மரக்கலமேறி வந்தது.

சுப்பிரமணியக்கடவுள் தெய்வயானை அம்மையார் வள்ளியம்மையார் என்னும் இருசத்திகளுக்கும் கதிர்காமத்தின் பெருமையை உபதேசித்தருளினார். தேவிமார் இருவரும் கடவுளை வணங்கி, "சுவாமீ! நாங்களும் அத்தலத்தில் வசிக்க விரும்புகின்றோம்" என்றார்கள். உடனே சுப்பிரமணியக்கடவுள் அவ்விரண்டு சத்திமார்களோடும் வீரவாகுதேவர் முதலிய வீரர்களும் தேவர்களும் தம்மைச்சூழ்ந்துவர வேதாரணியத்தை அடைந்தார். ஒரு திருவிளையாட்டாக விசுவகன்மாவை நோக்கி, "யாமெல்லோரும் கடலைக்கடந்து செல்லுவதற்கு ஒருமரக்கலத்தை உண்டாக்குதி" என்றார். தேவத்தச்சன் உடனே ஒரு மரக்கலத்தை உண்டாக்கினான்.

சுப்பிரமணியக்கடவுள் பிரமா முதலிய தேவர்களுடனும், வீரர்களுடனும் மரக்கலத்திலேறி, இலங்கையின் வடபாகத்தில் இருக்கும் **காங்கேசன்துறையில்** இறங்கியருளினார். விசுவகன்மா கடவுளுடைய கிருபையினால் ஒரு ஆலயத்தை உண்டுபண்ணினான். சுப்பிரமணியக்கடவுள் அவ்வாலயத்தில் எழுந்தருளினார். தேவர்கள் பூசித்து வழிபட்டார்கள். பின்பு கந்தசுவாமி மரக்கலமேறி, **பொலிகண்டி**யிலுள்ள கடற்கரையில் இறங்கியருளினார்.

பொலிகண்டியிலுள்ள வன்னிவனத்தில் விசுவகன்மா ஒரு ஆலயத்தை அமைத்தான். சுப்பிரமணியக்கடவுள் அக்கோயிலில் எழுந்தருளியிருந்தார். தேவர்கள் கடவுளைப் பூசித்தார்கள். கடவுள் பூரண கிருபை செய்தருளினார். அன்றுதொடக்கம் வன்னிவனம் **கந்தவனம்** எனப் பெயர் பெற்றது.

சுப்பிரமணியக்கடவுள் அவ்விடத்தினின்று மரக்கலமேறித் திரிகோணமலையையடைந்து அங்கேயுள்ள ஒரு மலையில் வீற்றிருந்தருளினார். அம்மலை அன்றுதொடக்கம் **கந்தசுவாமிமலை** என்றுவழங்குகின்றது. அங்கேயிருந்த சமனாசலம், முள்ளாலங்காடு முதலிய தலங்களை அடைந்து வீற்றிருந்தார். அவ்வத் தலங்களில் தேவர்கள் பூசித்தார்கள். சுவாமி கிருபை செய்தார்.

பின்பு முருகக்கடவுள் **சம்போதகிரியில்** வீற்றிருந்தார். தேவர்கள் அங்கே விசேஷபூசை செய்தார்கள். கடவுள் அதையேற்று உகந்தருளினார். அம்மலை அன்றுதொடக்கம் **உகந்தமலை** என்று வழங்குகின்றது. சுப்பிரமணியக்கடவுள் அவ்விடத்தினின்று **கதிர்காமத்தை** அடைந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினார். தேவர்கள் பூசித்து வணங்கினார்கள். முருகவேள் கிருபை செய்தார்.

கந்தக்கடவுள் ஏறிச்சென்ற மரக்கலம் உகந்தமலைக்குச் சமீபமாக நிறுத்தப்பட்டது. அது இப்பொழுதுங் கல்வடிவாகக் காணப்படுகின்றது.

# ௧௨. சுப்பிரமணியக்கடவுள் ஆட்டுக்கடாவை வாகனமாகக்கொண்டது.

நாரதமுனிவர் பூவுலகத்திலே ஒரு யாகத்தைச் செய்தார். அந்த யாககுண்டத்தினின்றும் ஒரு ஆட்டுக்கடா தோன்றியது. அது கோபித்து ஆரவாரஞ்செய்தது. அதனைக்கண்டு யாகத்தில் இருந்தவர்கள் எல்லோரும் பயந்து ஓடினர்கள்.

அந்தக்கடாவானது ஓடினவர்கள் எல்லோரையுந் துரத்திச்சென்றது. அவர்களுள்ளே சிலரைக்கொன்றது. எவ்விடத்திலுந் திரிந்து உயிர்களுக்கு நாசஞ் செய்தது.

அப்பொழுது நாரதமுனிவர்முதலியோர் திருக்கைலாசமலையை அடைந்தார்கள். அங்கே சுப்பிரமணியப்பெருமான் இருப்பதைக்கண்டு வணங்கினர்கள். சுப்பிரமணியக்கடவுள் "நீங்கள் மிக வருந்தினீர்கள்; நடந்தது யாது?" என்று வினவியருளினர். தேவர்களும் முனிவர்களும் வணங்கி "அடியேங்கள் ஒரு யாகத்தைச் செய்தோம். அதினின்னும் ஒரு ஆட்டுக்கடாத்தோன்றி, எங்களைக் கொல்லநினைத்தது. அதனால், யாங்கள் இங்கே ஓடிவந்தோம். அது சிலரைக்கொன்றது. அந்த ஆட்டை அடக்கி, எங்களுக்குக் கிருபைசெய்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

கடவுள் வீரவாகு என்னும் வீரரைப்பார்த்து "அந்தஆட்டுக்கடாவை இங்கே கொண்டுவரக்கடவாய்" என்று கட்டளையிட்டருளினர். வீரவாகுதேவர் எங்குந் தேடி அதனைக்காணமல், பிரமாவினுடைய உலகத்துக்குச் சென்றார். அவர் ஆட்டுக்கடா அங்கே செல்வதைக் கண்டு அது அஞ்சும்வண்ணம் ஆரவாரஞ்செய்து, அதன் கொம்பினை பிடித்து இழுத்துக்கொண்டுபோய்,

முருகக்கடவுளுடைய முன்னிலையிலேவிட்டார். தேவர்களும் முனிவர்களும் "அடியேங்கள் உய்யும்பொருட்டு இவ்வாட்டுக்கடாவைத் தேவரீர் வாகனமாகக்கொண்டருளும்" என்று பிரார்த்தித்தார்கள். முருகக்கடவுள் அவர்கள்செய்த தவத்தினாலே அன்றுதொட்டு அதனை வாகனமாகக் கொண்டருளினார்.

நாரதர் முதலியவர்கள் பூமியிலேசென்று யாகத்தை இடையூறு இல்லாது முடித்தார்கள்.

---

## கரு. உருத்திராக்ஷம்.

உருத்திராக்ஷம் சிவசின்னங்களுளொன்று, உருத்திராக்ஷம் என்பது சிவபிரானது திருக்கண்களிலிருந்து தோன்றியது எனப்பொருள்படும்.

முப்புரத்தவுணர்கள் கோடிவருடந் தவஞ்செய்து பிரமதேவரிடத்தில் பலவரங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் சிவபெருமானிடத்தில் அன்புகொண்டு அப்பெருமானைப் பூசித்துவந்தார்கள். சிவபூசை செய்தார்களாயினும் அசுரகுலத்திற் பிறந்தமையால் விட்டுணு முதலிய தேவர்களுக்கு அளவற்ற துன்பங்களைச் செய்தார்கள். தேவர்கள் வருந்திச் சிவபிரானைக்குறித்துத் தவஞ்செய்தார்கள். சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் எழுந்தருளி வந்தார். தேவர்கள் தங்கட்குத் திரிபுரத்தவுணரால் உண்டான துன்பத்தை விண்ணப்பஞ்செய்தார்கள். உடனே திருக்கைலாசபதியினுடைய மூன்று திருக்கண்களினின்றும் எம்போல்வார் உய்தற்பொருட்டு நீர்த்துளிகள் விழுந்தன. அவற்றிலிருந்து தோன்றிய மணிகளே உருத்திராக்ஷமாம். தோன்றும்போது அவ்வம்மணிகளோடு அவ்வவற்றிற்குரிய மரங்களும் உதித்தன.

NAGAR, MADRAS-90 LIBRARY

உருத்திராக்ஷமணி தரிப்பவர்கள் பிசாசுகளினாலும் கிரகம் முதலியவைகளினாலும் வருந் துன்பமும் பிறவித்துன்பமும் அகலப்பெறுவார்கள். உருத்திராக்ஷம் தரித்துக்கொண்டு மதுபானம் மாமிசபோசனம் முதலியவை செய்தவர்கள் தப்பாது நரகத்தில்விழுந்து துன்பத்தை அனுபவிப்பார்கள்.

---

## கச. திருநந்திதேவர்.

சிலாதனர் என்னும் பெயரையுடைய முனிவர் திருவையாற்றையடைந்து, தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, சிவபூசையும் சிவாலயதரிசனமுஞ் செய்து, பலகாலம் தவமியற்றினர். சிவபெருமான் தோன்றி "அன்பனே! உனக்குவேண்டிய வரம் யாது?" என்று வினவியருளினர். முனிவர் "அடியேனுக்கு இறவாத ஒருபுத்திரனைத் தந்தருளவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். பெருமான் "அவ்விதமே தந்தோம்" என்றுகூறி மறைந்தருளினர்.

பின்பு முனிவர் யாகஞ்செய்யவிரும்பி, முதலில் பூமியை உழுதார். அப்பொழுது அங்கே பொற்பேழையொன்றில் ஓர் குழந்தை இருக்கக்கண்டு, அதனை எடுத்தார். அம்முனிவர் தமது வீட்டைஅடைந்து, அக்குழந்தைக்குச் செப்பேசுரர் என்று பெயரிட்டு வளர்த்துவருவாராயினர். அவருக்கு ஏழாவது வயது வந்தபொழுது, மித்திராவருணர் என்னும் முனிவர் தந்தையாகிய சிலாதன முனிவரைநோக்கி "இப்புத்திரன் சிலகாலத்தில் இறப்பான்" என்றுகூறினர். தந்தையார் துன்பங் கூருவாராயினர்.

அதுகண்ட செப்பேசுரர் "யான் இறவேன் அஞ்சற்க" என்று தந்தையாரைத் திடப்படுத்தித் திருவையாற்றை அடைந்து, சிவபெருமானைப் பணிந்து

பெருந்தவஞ் செய்தார். சிவபெருமான இடபவாகனரூடராய்த்தோன்றி, "இயமன் உன்னுடைய உயிரைக் கவரமாட்டான்" என்று திருவாய்மலர்ந்து, தமது திருக்கரத்தை அவர் தலைமேல்வைத்துப் பரிசதீக்ஷை செய்தருளினர். பரமசிவன் அதன்பின்னர் திருநந்திதேவர் என்னுந் தமது திருநாமத்தையும் மூன்றுதிருக்கண், பிறை, மான், மழு முதலியவற்றோடுகூடிய சாரூபத்தையும் கொடுத்துச் சிவகணங்களுக்குத் தலைவராக்கியருளினர்.

திருநந்திதேவர் பரமசிவனது உத்தரவின்படி சுயசை என்பவரை மணஞ்செய்தார். திருநந்திதேவர் திருக்கைலாசமலையைக் காவல்செய்யும் அதிகாரத்தையும், குருசந்தானம் விளங்க முதற்குருவாயிருந்து சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு வேத சிவாகமங்களை உபதேசிக்கும் முதன்மையையும் சிவபெருமானிடத்தில் பெற்றுக்கொண்டனர்.

### திருநாவுக்கரசு நாயனர்.

[திருத்தாண்டகம்.]

முந்தியிருந்தாயுநீயேயென்று
　　முன்கயிலைமேவிநுய்நீயேயென்றும்
நந்திக்கருள்செய்தாய்நீயேயென்று
　　நடமாடிநள்ளாறனீயேயென்றும்
பந்திப்பரியாடுநீயேயென்றும்
　　பைஞ்ஞீலிமேவிஞய்நீயேயென்றும்
சிந்திப்பரியாயுநீயேயென்று
　　நின்றநெய்த்தானுவென்னெஞ்சுளாயே.



## கரு. மாணிக்கவாசகசுவாமிகள்.

திருவாதவூரடிகள் பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூரிலே பிராமணகுலத்திலே திருவவதாரஞ்செய்தருளினர். அவர் வேதம் சிவாகமம் முதலிய எல்லாக்கலைகளையும் கற்றுவல்லவரானர். அரிமர்த்தன பாண்டியராசன் அவருடைய திறமையைக்கேள்விப்பட்டு, அவரைத்தனக்கு முதன்மந்திரியாக்கினன். அவர் நீதிமுறைப்படி மந்திரி உத்தியோகத்தை நடத்தினர். சிவபெருமானிடத்திலே அன்புமிகுந்து, தமக்கு உபதேசஞ்செய்ய வல்ல ஒரு சற்குருவைத் தேடுவாராயினர்.

ஒருநாள் பாண்டியராசன் நல்லகுதிரைகள் வாங்கிவரும்படி, திருவாதவூரடிகளிடம் அளவற்ற திரவியத்தைக் கொடுத்து அனுப்பினன். அவர் செல்லும்பொழுது திருப்பெருந்துறை என்னும் திருப்பதியைச் சேர்ந்தார். பரமசிவன் அவருக்கு அங்கே அருள்செய்யும்படி ஒரு குருந்தமரநீழலில் ஞானசாரிய மூர்த்தங்கொண்டு வீற்றிருந்தார். திருவாதவூரடிகள் சிவபெருமானைக்கண்டு, அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து, "அடியேனுக்கு அருள்செய்ய வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். பரமாசாரியர் அவருக்குத்தீக்ஷை செய்து மாணிக்கவாசகர் என்னும் நாமத்தையுங் கொடுத்தருளினர். மாணிக்கவாசகசுவாமிகள் தமது ஆபரணங்களையும், பாண்டியன் கொடுத்த திரவியத்தையும் பரமாசாரியரது திருமுன்

னிலையில்வைத்து வணங்கினார். பரமாசாரியர் அவை களைச் சிவபுண்ணியங்களுக்கு உபயோகமாகும்படி செய்தார்.

திருவாதவூரடிகள் உலகப்பற்றற்று, சிவபெருமானுடைய திருச்சன்னிதியை நீங்காது இருந்தார். பாண்டியன் திருவாதவூரடிகளைத் தன்னிடத்து விரைவாகவரும்படி ஒருதிருபம் அனுப்பினான். சுவாமிகள் பரமாசாரியரைச் சமீபித்து வணங்கி, அந்த திருபத்தை வாசித்தார். பரமாசாரியர் பாண்டியராசனுக்குக் கொடுக்கும்படி மாணிக்கரத்தினம் ஒன்றை அவரிடம் கொடுத்து, குதிரைகள் ஆவணிமாதத்து மூல நக்ஷத்திரத்திலே வரும் என்று அறிவித்தருளினார். சுவாமிகள் மந்திரிவேஷத்துடன் அரசனிடம் சென்று, மாணிக்கத்தையுங் கொடுத்து, குதிரைகள் வரும் நாளையுங்கூறித் தமது மாளிகையை அடைந்தார்.

பாண்டியராசன் திருப்பெருந்துறையிலும் அதற்கு அயலூர்களிலும் குதிரைகள் வராமையைக் கண்டு, கோபங்கொண்டு, மாணிக்கவாசக சுவாமிகளைச் சிறையில்வைத்து வருத்தினான். அவர் சிவபெருமானைத் தியானித்தார். அன்பர்களுக்கு இரங்கியருளும் பரமசிவன் ஆவணிமூலநக்ஷத்திரத்தில் காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டுவந்தருளினார். அரசன் மகிழ்ந்து திருவாதவூரடிகளைச் சிறையினின்றும் நீக்கிக் குதிரைகளை ஏற்றுக்கொண்டான்.

சிவபெருமான் அன்றிரவு குதிரைகளையெல்லாம் நரிகளாக்கினார். நரிகள் கூக்குரல்செய்து, பந்தியிற் கட்டப்பட்டிருந்த குதிரைகளைக்கொன்று, சனங்களையும் வெருட்டித்திருந்தன. அரசன் கோபங்கொண்டு, திருவாதவூரடிகளை வெயிலில் நிறுத்தினான். அவர் சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தார்.

சிவபெருமானுடைய திருவருளினாலே, வைகை நதி மதுரையை அழிப்பதுபோலப் பாய்ந்து சென்றது. அரசன் மனம்வருந்தினான். மந்திரிமார்கள் அவனைநோக்கி "திருவாதவூரடிகளை வெயிலினின்றும் நீக்கி மகிழ்ச்சிசெய்தால் வைகைநதி ஊரை அழியாது" என்று சொன்னார்கள். அரசன் அவரைச் சிறையின்றும் நீக்கி, வைகையை அடைப்பிக்குமாறு வேண்டினான். திருவாதவூரடிகள் சிவனைத் தியானித்தார். உடனே நதியினது வேகம் அடங்கியது. மதுரை நகரத்தில் உள்ளவர்கள் தங்கள் தங்களுக்காக அளந்துவிடப்பட்ட பங்கை அரச கட்டளைப்படி அடைத்தார்கள்.

இந்த மதுரைநகரத்திலே சிவபெருமானிடத்துப் பேரன்புடையவளும், பிட்டு விற்றுச்சீவனஞ் செய்பவளுமாகிய வந்தியென்கின்ற ஒரு வயோதிகப் பெண் இருந்தாள். அவள் தனது பங்கை அடைத்தற்குக்கூலியாள் இல்லாமல் வருந்தி, சோமசுந்தரக் கடவுளது திருக்கோயிலிலே சென்று, "யான் கொடுக்கும் பிட்டையே கூலியாகப்பெற்று, கூலியாளாய் அணையைக்கட்டுவாரொருவருமில்லை. சுவாமி! அடியேன் தேவரீருக்கு அடைக்கலம்" என்று புலம்பினாள்.

சோமசுந்தரக் கடவுள் அவளுடைய துன்பத்தை ஒழிக்கத் திருவுள்ளங்கொண்டு, ஒரு கூலியாளராய், கூடையைத் தலைமேற்கொண்டு தோளில் மண்வெட்டியைத்தாங்கி மிக்கபசியுடையவரைப்போல விரைந்து வந்தருளினார். வந்த பெருமான் பிட்டைக் கூலியாகப் பெற்றுக் கரையை அடைப்பதற்கு உடன்பட்டார். வந்தி "அப்பா, இதனை உண்பாயாக" என்று பிட்டை அள்ளிக்கொடுத்தாள். கூலியாளராகிய கடவுள் தமது கிழிந்த வஸ்திரத்தை நீட்டி யேற்று அதனைத்திருவமுது செய்தருளினார் "தாயே! இப்பிட்டுமிகவும் நன்று

இன்னும் தரவேண்டும்" என்று வாங்கி, அதனைத் தின்று தின்று வைகைக்கரையையடைந்தார். அடைந்து கரையை அடையாது, மண்ணைச் சுமந்து கரையிற்போட்டும், ஆடியும், பாடியும், குதித்தும், சிரித்தும் விளையாடிக் கொன்றைமரநிழலிலே நித்திரை செய்தார்.

அப்பொழுது காரியதரிசி ஒருவன் சிவபெருமானாகிய கூலியாளை அடித்தான். அந்த அடி உலகமெங்கும் பட்டது. உடனே சோமசுந்தரக்கடவுள் மறைந்தருளினார். கூலியாளாக வந்தவர் சிவபெருமானே என்று பாண்டியராசன் அறிந்து "யான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுக" என்று, திருவாதவூரடிகளை நமஸ்கரித்தான். திருவாதவூரடிகள் அவனுக்கு அருள்செய்து, தமது மந்திரிஉத்தியோகத்தை விடுத்துத் திருப்பெருந் துறையையடைந்தார். அங்கே எழுந்தருளி இருந்த பரமாசாரியர் திருவாதவூரடிகளுக்குக் கிருபைசெய்து மறைந்தருளினார். திருவாதவூரடிகள் பல தலங்களையுந் தரிசித்துத் தமிழ்வேதமாகிய திருவாசகத்தைப் பாடிவருவாராயினர். அவர் சிதம்பரத்தில், நடராஜரைத் தரிசனம் செய்து கொண்டு இருக்கும் காலத்தில் இலங்கையிலிருந்து சென்ற புத்தர்களைத் தருக்கத்தில் வென்றார்.

சிவபெருமான் ஒருநாள் பிராமண வடிவங் கொண்டு, திருவாதவூரடிகளிடம் வந்து "நீர் சிவபெருமானை அன்பினாலே பாடிய தமிழ்ப்பாடல்களை எழுத வேண்டும். விளங்கச் சொல்லும்" என்றார். திருவாதவூரடிகள் மெய்ஞ்ஞானப் பொருளையுடைய திருவாசகத்தை உவந்து சொன்னார். அவர் கூறியவற்றையெல்லாம் சிவபெருமான் ஏட்டிலே எழுதிப்பின்னர், சயாநாயகரைத் தலைவராகக் கொண்டு, ஒரு கோவை பாடவேண்டும் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

திருவாதவூரடிகள் திருக்கோவையாரை மகிழ்ந்து கூற, பெருமான் எழுதிமுடித்த பின்னர் விரைந்து மறைந்தருளினார்.

சிவபெருமான் திருக்கோவையார் எழுதி முடிந்தவிடத்தில், திருவாதவூரன்சொல்ல எழுதிய இப்புத்தகம் திருச்சிற்றம்பலமுடையாரது எழுத்தாகும் என்று எழுதி, கனகசபையில் உள்ள பஞ்சாக்ஷரப்படியில் வைத்தருளினார். தில்லைவாழந்தணர்கள் அத்திருமுறையை எடுத்துக்கொண்டு, மாணிக்கவாசகசுவாமிகளை அடைந்து, "இவற்றின் பொருளை அருளிச்செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அவர் கனகசபைக்கு எதிரேபோய், இந்த "நடராஜப்பெருமானே இப்பாடல்களின் பொருள்" என்றுகூறி அப்பெருமானோடு இரண்டறக்கலத்தலாகிய சாயுச்சிய முத்தி அடைந்தனர்.

---

## கஎ. திருநாளைப்போவார் நாயனார்.

சோழநாட்டிலே, ஆதனூரிலே, புலையர் குலத்திலே நந்தனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபிரானுடைய பாதங்களையே நினைப்பவர். சிவாலயங்கள்தோறும் பேரிகை மத்தளம் முதலிய வாத்தியங்களுக்குத் தோலும் வாருங்கொடுப்பவர்; வீணைக்கும் யாழுக்கும் நரம்பு கொடுப்பவர்; அருச்சனைக்குக் கோரோசனை கொடுப்பவர்; ஆலயங்களின் வாயிலிலே நின்றுகொண்டு, கூத்தாடிப் பாடுகின்றவர்.

அவர் ஒருநாள் திருப்புன்கூர் என்னுந் தலத்துக்குச்சென்று, திருக்கோயிலின் வாயிலிலே நின்றுகொண்டு, சுவாமியை நேரே தரிசிக்க விரும்பினார். சுவாமி அவர் விரும்பியவாறு தமது திருமுன்னிலையிலே இருக்கும் இடபதேவரை விலகும்படி செய்து

காட்சி கொடுத்தருளினர். அவர் அந்தத்தலத்திலே ஒரு குளம்வெட்டி, வீட்டுக்குப்போயினர்.

அவர் ஒருநாள் சிதம்பரத்துக்குப் போக விரும்பினர். அந்த விருப்பம் மிகுந்தமையினலே, அன்று இரவு முழுவதும்நித்திரைசெய்யாது இருந்தார். விடிந்தபின் "நான் சிதம்பரத்துக்குச் சென்றல், திருக்கோயிலினுள்ளே பிரவேசித்தற்கு எனது சாதிக்கு யோக்கியம் இல்லை" என்று போகாதுவிட்டார். பின்னுஞ்சிதம்பரஞ் செல்லுவதற்கு ஆசைமிகுந்தது. அவர் "நாளைக்குப்போவேன்" என்றர். இப்படியே அவர் "நாளைக்குப்போவேன், நாளைக்குப்போவேன்" என்று பல நாட்களைப்போக்கினர். அதனல் அவருக்குத் திருநாளைப்போவார் என்னுந் திருநாமம் உண்டாயது.

திருநாளைப்போவார் நாயனர் ஒருநாள் சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார். அவர் உள்ளே பிரவேசித்தற்கு அஞ்சி, மதிலின் வாயிலிலே நமஸ்கரித்து, திருஎல்லையை வலம்வந்து போவார். இப்படி ஒழுகுகின்ற திருநாளைப்போவார் நாயனர் "சபாநாயகரை எப்படித் தரிசனஞ் செய்யலாம், இந்த இழிபிறப்பு இதற்குத் தடையாயிற்றே" என்று துக்கத்தோடு நித்திரை செய்தார். சபாநாயகர் நாயனருடைய கனவிலே தோன்றி, "அப்பனே, நீ இப்பிறப்பு நீங்கும்படி நெருப்பிலே முழுகி எழுந்து, எமது சந்நிதியிலே வா" என்று கிருபை செய்தார். பின்னர் தில்லைவாழந்தணருக்கும் சொப்பனத்திலே தோன்றி, அந்தத் திருநாளைப்போவார் பொருட்டு அக்கினியை வளர்க்கும்படி கட்டளையிட்டு மறைந்தருளினர்.

தில்லைவாழந்தணர்கள் தென்மதிற்புறத்திலே, ஒரு குழியில் அக்கினியை வளர்த்து, திருநாளைப்போவார் நாயனருக்குத் தெரிவித்தார்கள். அவர் சிவபெருமானுடைய திருவடிகளைத்தியானித்துக்கொண்டு, அந்த

அக்கினியினுள்ளே புகுந்தார். உடனே அத்தேகம் நீங்கி, ஒரு பிராமண முனிவடிவங்கொண்டு எழுந்தார். அதைக்கண்டு, அந்தணர்களும் அடியார்களும் அஞ்சலி செய்தார்கள். திருநாளைப்போவார் அவர்களுடன் சென்று, கனகசபையை அடைந்தார். அங்கே நின்றவர் அவரைக்காணுதவராயினர். சபாநாதர் திருநாளைப் போவாருக்குத் தமது திருவடிகளைக் கொடுத்தருளினார்.

சுந்தரமூர்த்திநாயனார்.
[பண் - தக்கேசி.]

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
　　னாவினுக்கரையனாளைப்போவானும்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
　　கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
　　கொள்கைகண்டுநின் குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
　　பொய்கைசூழ்திருப்புன்கூருளானே.

---

## ௧௮. சேக்கிழார்நாயனார்.

தொண்டைநாட்டிலே, குன்றத்தூரிலே, வேளாளர்குலத்திலே, சேக்கிழார்மரபிலே அருண்மொழித்தேவர் என்னும் சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார். அவர் தாம் உதித்த சேக்கிழார்மரபை விளக்கினமையால் அவருக்குச் சேக்கிழார் என்னும் பெயர் உண்டாயிற்று.

அநபாயசோழமகாராசா அவரைத் தமக்கு முதன் மந்திரியாக்கினார். அவர் குன்றத்தூரிலே ஒரு சிவாலயங் கட்டுவித்துப் பிரதிட்டைசெய்து நித்திய நைமித்தியங்களைக் குறைவின்றி நடத்துவித்தார். அரசனுடைய செங்கோலையும் ஒழுங்காகச் செலுத்திவந்தார்.

இப்படி நடக்கும் நாளிலே, சைவசமயிகளிற் சிலர் தங்கள் சைவநூல்களைக்கல்லாது, சமணநூலாகிய **சீவகசிந்தாமணியை** மெய்யென்று நினைத்துப் படித்தார்கள். அரசரும் அச்சீவகசிந்தாமணியை மெய்யென்று கேட்பாராயினார். அருண்மொழித்தேவர் அரசனை நோக்கி, "நீர் சைவ சமயியாயிருந்தும் சிவசரித்திரத்

தைக்கேளாமல், சிவபெருமானை நிந்திக்கும் சமணர்களுடைய பொய்க்கதையாகிய சீவகசிந்தாமணியை மெய்யெனக் கருதிக்கேட்பது பாதகமென்று அறிந்து கொள்ளும்" என்று கண்டித்தார். இராசாவானவர் "இது பிரயோசனமற்ற கதையாயின், பயன்தரத்தக்க சிவகதை யாது சொல்லும்" என்று கேட்டார்.

திருவாரூரிலே வன்மீகநாதர் தமது திருத்தொண்டர்களது அடிமைத் திறத்தைப் பாடும்பொருட்டு "**தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்**" என்று அடியெடுத்துக் கொடுக்க, சுந்தரமூர்த்திநாயனர் **திருத்தொண்டத்தொகை** என்னும் தேவாரத்திருப்பதிகத்தைப் பாடியருளினர். நம்பியாண்டார்நம்பி என்பவர் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாருடைய கிருபையால் அத்திருத்தொண்டத் தொகையை வகுத்து, ஒரு அந்தாதி செய்தருளினர். அதன் பெயர் **நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி** என்றார்.

இராசா அதனைக்கேட்டு, "இந்தச் சரித்திரத்தைப் பெருங்காப்பியமாக விரித்துச் செய்து தாரும்" என்று இரந்து வேண்டினர்.

அருண்மொழித்தேவர் சிதம்பரத்தை அடைந்து சபாநாயகரை நமஸ்காரஞ்செய்து, "அடியேன் திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தைப் பெரும்காப்பியமாக விரித்துப்பாடத் தேவரீர் அடியெடுத்துத் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்து வணங்கினர். உடனே சபாநாயகரது திருவருளினலே "**உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்**" என்று ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. அதனைத் தில்லைவாழந்தணர்களும் மற்றையோருங்கேட்டுச் சந்தோஷம் அடைந்தார்கள். அருண்மொழித்தேவர் விதிப்படி விபூதி உருத்திராக்கந் தரித்து, ஆயிரக்கால்மண்டபத்தை அடைந்தார். சபாநாயகர் எடுத்துக்கொடுத்த திருவாக்கை முதலாகக்

கொண்டு, புராணத்தைச் சிலகாலத்திற் பாடிமுடித்தார். அதற்குத் **திருத்தொண்டர் புராணம்** என்றும் **பெரியபுராணம்** என்றும் பெயர்.

சோழராசா புராணம் முற்றுப்பெற்றமையையறிந்து, சிதம்பரத்தை அடைந்தார். அருண்மொழித்தேவருடைய சிவவேடத்தைக்கண்டு மகிழ்ந்து, அவருடைய திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்தார். பின்பு சபாநாயகரை நமஸ்காரஞ்செய்து, அருள்பெற்றார்.

அரசர் திருத்தொண்டர்புராணங் கேட்கவரும் பொருட்டுச் சிவனடியார்கள் சிவாசாரியர்கள் முதலிய அனைவருக்கும் திருபம் அனுப்பினார். எல்லோருஞ்சிதம்பரம் சேர்ந்தார்கள். தில்லைவாழந்தணர்களுள் ஒருவர் சபாநாயகரது திருச்சன்னிதானத்தில், புராணத்திருமுறையை ஆசனத்தில் வைத்துப் பூசித்து வணங்கினார். சோழராசா முதலிய அடியார்கள் சேக்கிழார் நாயனாரை வணங்கி, "சுவாமீ! இப்புராணத்தைத் தேவரீரே வாசித்துப் பொருள் சொல்லும்" என்றார்கள். அவர் புராணத்தை வாசித்துப் பொருளை விரித்துச் சொன்னார். எல்லாரும் அன்புடன் இருந்து கேட்டார்கள். நாயனார் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி ஒருவருடத்திலே முடித்தருளினார்.

சோழராசா நாயனாரை யானைமேலேற்றி, திருமுறையை யானையின் சிரசில் இருத்தி தாமுங்கூடஏறி, இரண்டு கைகளினாலும் சாமரம் வீசினார். சேக்கிழார் நாயனார் வீதிவலம்செய்து, யானையினின்றும் இறங்கி, கனகசபையிற்சென்று புராணத் திருமுறையை வைத்தார். சோழர் அவருடைய திருவடிகளில்விழுந்து நமஸ்கரித்தார்.

அருண்மொழித்தேவர் சிலகாலம் சிதம்பரத்தில் இருந்து சபாநாயகருடைய திருவடிநீழலை அடைந்தார்.

---

## ௧௬. விட்டுணு சிவபூசைசெய்தது.

மேகவாகனகற்பத்திலே விட்டுணுமூர்த்தி பிரமாவையும், உலகங்களையும் படைக்கவிரும்பிச் சிவபெருமானை முகிலுருக்கொண்டு பலகாலந்தாங்கினார். சிவபெருமான் தோன்றி அருளி, "விட்டுணுவே, நீ பலகாலம் எம்மை முகில்வடிவங்கொண்டு தாங்கினாய்; உனக்கு யாது வரம்வேண்டும்" என்று வினாவியருளினார். விட்டுணு "தேவரீருடைய கிருபையினால் பிரமாவையும், உயிர்களையும் படைக்கவிரும்பினேன்; கிருபைசெய்தருளுக" என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் "நீ காஞ்சீபுரத்தை அடைந்து, எம்மைத் தாமரைப்பூக்களினாலே பூசைசெய்யின் இவ்வரத்தைப்பெறுவாய்" என்று கூறியருளினார்.

அப்பொழுது விட்டுணு விடைபெற்றுக்கொண்டு, காஞ்சியை யடைந்து, புண்ணிய கோடியிற் றடாகம் ஒன்று உண்டாக்கி, சிவலிங்கத்தைத் தாபித்துப்பூசை செய்துகொண்டிருந்தார்.



இப்படி இருக்குங்காலத்திலே, ஒரு யானை விட்டுணுவுக்குத் தொண்டு செய்ய நினைத்து, அவரை

அடைந்து. அது நாள்தோறும் நீராடி, தாமரைமுத லாகிய பூக்களைக் கொய்துகொடுத்து வந்தது. விட் டுணு அந்தப்பூக்களினாலே பரமசிவனைப் பூசித்துவந் தார். ஒருநாள்யானை தடாகத்திலே தாமரைப்பூக்களைக் கொய்யும்பொழுது ஒருமுதலை அதன்காலிலே பிடித்து இழுத்தது. முதலை இழுக்க, யானை சகிக்கமாட்டாது "ஆதிமூலமே"! என்று விட்டுணுவைக் கூவி அழைத் தது. விட்டுணு மூர்த்தி உடனே கருடவாகனத்தில் எழுந்தருளிவந்து சக்கராயுதத்தைச் செலுத்தி, முத லையைக் கொன்றார். பின்பு விட்டுணுமூர்த்தி காஞ்சீபு ரத்திலே பூசைசெய்துகொண்டிருந்தார்.

சிவபெருமான் இடபவாகனத்திலே தோன்றி, காட்சி கொடுத்தருளினார். விட்டுணுவணங்கி, "பிரமா வையும் உலகத்தையும் படைக்க வரந்தந்தருளுக; தேவ ரீருடைய திருவடிகளிலே நீங்காத அன்பையுந் தந்த ருளுக; யான் இருக்கும் இம்மலை, என்னிடத்திலே அன் புபொருந்திய இந்த யானையின்பேரினால் அத்திகிரி என்று வழங்கல்வேண்டும்; தேவரீரும் இவ்விலிங்கத் தில் என்றும் இருந்து அருள்செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் "அவ்விதமே உனக்கு வரங்களைத்தந்தோம்" என்றுகூறி மறைந்தருளினார்.

## ௨0. அரதத்தாசாரியார்.

சோழநாட்டிலே, கஞ்சனூரிலே பிராமணகுலத் திலே, வாசுதேவர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் வைஷ்ணவக்கொள்கைகளிலும், ஆசாரத்திலும் மிகுந்த பற்றுள்ளவர். அவர்செய்த தவத்தினாலே ஒரு புதல் வர் பிறந்தார். அக்குழந்தைக்குச் சுதர்சனர் என்று பெயரிடப்பட்டது. சுதர்சனர் முற்பிறவிகளிலே

செய்த புண்ணியத்தால், வைஷ்ணவசமயத்திலே பற்றில்லாதவராய்ச் சிவாலயத்துக்குச்சென்று அங்கே தொண்டு செய்துவந்தார்.

வாசுதேவர் ஒருநாள் தமது புத்திரராகிய சுதர்சனரை அழைத்து, "குழந்தாய்! நீ விபூதி அணியாதே; உருத்திராக்ஷம் தரியாதே; சிவனடியாரோடு இணங்காதே" என்று கூறினர். சுதர்சனர் வழக்கம்போல விபூதி உருத்திராக்ஷம் தரித்து, கோயிலுக்குப்போய்ச் சிவபெருமானை வழிபட்டு வீட்டுக்கு வந்தார். பெற்றோர் இதனை அறிந்து மிகக்கண்டித்தார்கள். அவர்கள் கண்டித்தும் பயன்படவில்லை. அதனால் அவருக்குப் போசனமுங்கொடாது, வீட்டைவிட்டுத் துரத்தி விட்டார்கள். துரத்திவிடப்பட்டபிள்ளை பசியினால் வருந்தி, சிவாலயத்துக்குப்போய்ப் பரமசிவனைவணங்கி, "என்னைக் கிருபைகூர்ந்து இரட்சிப்பீராக"என்று புலம்பி அழுதார்.

உடனே பரமசிவன் பிரசன்னராய் "உனக்கு வேண்டியது யாது" என்று வினவியருளினர். அவர் "தேவரீரிடத்து அன்பையே எனக்கு அருளுக" என்று விண்ணப்பித்தார். பரமசிவன் விபூதி உருத்திராக்ஷம் அணிவித்து, பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து, பூசை எழுந்தருளப்பண்ணி, அரதத்தர் என்னும் நாமத்தையுங்கொடுத்து மறைந்தருளினர்.

இதனை அறிந்தபிதாவாகிய வாசுதேவரும் மற்றையோரும் "சிவனுடைய மகத்துவத்தைத் தாபிப்பாயாக" என்று கூறினர். அரதத்தாசாரியர் அதற்கு உடன்பட்டு, விட்டுணுகோயிற்சன்னிதியில், நெருப்பிற்காய்ச்சிய இரும்பு முக்காலியிலே சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு இருந்தார். அவருக்கு அம்முக்காலி தடாகம்போலக் குளிர்ந்தது. அரதத்தாசாரியர் அதன்மீது இருந்துகொண்டு சுருதிசூக்திமாலை என்னும்

நூலைத் தோத்திரமாகச் செய்தருளினர். அன்றியும், பஞ்சரத்தினமாலிகை முதலிய பிரபந்தங்களையும் செய்தருளினர். அப்பொழுது அனைவரும், அரதத்தாசாரியரைச் சிவனெனவே கொண்டு, அவரது பாதங்களில் விழுந்து வணங்கினர்கள். இதனைக்கண்ட வாசுதேவரும் ஏனைய வைணவர்களும் சிவசின்னமணிந்து சைவரானர்கள்.

---

## அரதத்தாசாரியர் II.

அரதத்தாசாரியர், பிரமசரிய நிலையை வழுவாது அனுட்டித்து முடித்து, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்த கமலவல்லியம்மை என்பவரை மணஞ்செய்தார். ஆசாரியர் தமது இல்லக்கிழத்தியாகிய கமலவல்லியோடு சிவபூசை முதலியவற்றைச் சிறப்பாகச் செய்துவந்தார். இங்ஙனம் நிகழும் நாளிலே அம்மையார் ஓர் புதல்வரைப்பெற்றார். ஆசாரியர் அப்புதல்வருக்கு அக்கினீசுவரர் என்று பெயரிட்டனர். அவருக்குப்பின்னர் மகாதேவர், நீலகண்டர், சங்கரர், சந்திரசேகரர், சம்பு, மத்தியார்ச்சுனேசுவரர், கோவடுநாயகர் என்னும் ஏழுபுதல்வர்களும் கற்பகை, மீனாக்ஷி என்னும் இரண்டு புதல்விகளும் பிறந்தார்கள். அக்குழந்தைகள் எல்லோரும் தந்தையாருடைய கட்டளையின்படியே நடப்பவர்கள். திருநீற்றையும் உருத்திராக்ஷத்தையும் அன்போடு தரிப்பவர்கள். சிவபூசை செய்பவர்கள்.

ஆசாரியருடைய பிறப்பிடமாகிய கஞ்சனூரிலே சிவபெருமானுக்குத் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது. அவ்வூரிலுள்ள பெண்களெல்லாம் ஆபரணங்களால் தங்களை அலங்கரித்துக்கொண்டு, திருவிழாவுக்குப் போனார்கள். கற்பகை, மீனாக்ஷியென்னும் சிறுமிகள் இருவரும் ஆசாரியருடைய முன்னிலையில் வந்து இவ்விதம் விண்ணப்பித்தார்கள்.

"அப்பா! எங்கள் ஊரிலுள்ள திருக்கோயிலிலே இரதோற்சவம் வெகுசிறப்பாக நடைபெறுகின்றது. அவ்வுற்சவ தரிசனஞ்செய்ய எங்களுக்கும் அனுமதி தந்தருளுக."

ஆசாரியர்: — "நீங்கள் கோயிலுக்குப்போய் விதிப்படி தரிசனம்செய்து வாருங்கள்."

சிறுமிகள்: — "அயல்வீட்டுப் பெண்கள்போல நாங்களும் அணிந்துகொள்ளுவதற்கு ஆபரணங்கள் தரவேண்டும்."

ஆசாரியர்: —"விபூதியே சரீரத்துக்கு ஆபரணம்; அதுவுமல்லாமல், சிவபெருமானுடைய புகழைக் கேட்டலே காதுகளுக்கு ஆபரணம்; அவரைத்தொழுதலே கைகளுக்கு ஆபரணம்; அவரை வலம்வருதலே கால்களுக்கு ஆபரணம்; அப்படியிருக்கவும், பிள்ளைகளே! நீங்கள் வருந்துவது ஏன்?"

சிறுமிகள்:—"அப்பா! தேவரீர் கூறுவது உண்மையேயாயினும், அயல்வீட்டுப்பெண்கள் தங்களைப் போல எங்கட்கும் உலகத்தார் விரும்பும் ஆபரணங்கள் இல்லையென்று இகழுகிறார்கள்."

ஆசாரியர்: — "முற்பிறப்பிற் சிவபெருமானை வழிபட்டவர்களுக்கே ஆபரணம் முதலியன கிடைக்கும்."

சிறுமிகள்:—"தேவரீருக்கு இவை கிடைத்தல் அரிதல்ல. எப்படியுந் தருதல்வேண்டும்."

ஆசாரியர்:—"பிள்ளைகளே! இந்தவீதியிலே ஓர் எருது செல்லுகின்றது. இவ்வெருத்தின துகுளம்பு அழுந்திய இடங்களில் உங்களுக்குவேண்டிய அணிகள் கிடைக்கும். நீங்கள் இதன்பின்னே சென்று அவற்றைப் பெறுங்கள்."

புதல்வியர் அவ்வாறேசென்று பலவிதமான ஆபரணங்களைக்கண்டு எடுத்துவந்தார்கள்.

ஆசாரியர்:—"நீங்கள் கண்டெடுத்த ஆபரணங்கள் எவை?"

சிறுமிகள்:—"சிலம்பு, பதக்கம், பவளமாலை, தோடு, கைவளை முதலியனவெல்லாம் கிடைத்தன."

பின்பு சிறுமிகள் மகிழ்ச்சியுடன் தங்கள் தாயாரிடம்போய் "அம்மா! இவைகளால் எங்களை அலங்கரிக்கவேண்டும்" என்றார்கள். தாயார் அவர்களை அவ்வாபரணங்களால் அலங்கரித்தார். அவர்கள் தாங்கள் அணிந்து எஞ்சிய ஆபரணங்களைப் பழம் பாக்கு வெற்றிலை முதலியவற்றோடு எடுப்பித்துக்கொண்டு கோயிலுக்குப் போயினார்கள். போய் அவ்வாபரணங்களாலே சிவபெருமானையும் உமாதேவியாரையும் அலங்கரிப்பித்து வழிபாடுசெய்து திரும்பினார்கள்.

அரதத்தாசாரியர் இன்னும் அநேக அற்புதங்களைச்செய்து சிவபெருமானுடைய பாதநீழலை அடைந்தார்.

---

## ௨௯. கௌரி.

மதுரையில் விருபாக்கன் என்னும் ஒரு பிராமணன இருந்தான். அவன்மனைவி பெயர் சுபவிரதை. அவர்கள் தவஞ்செய்து கௌரி என்னும் புத்திரியைப் பெற்றார்கள். கௌரி ஐந்துவயசிலே பிறவிநோய்க்கு அஞ்சி அதை நீக்கக்கருதி, பிதாவால் தனக்கு உபதேசிக்கப்பட்ட உமாதேவியாருடைய மந்திரத்தைச் செபித்துவந்தாள்.

கௌரிக்கு எட்டுவயசாயது. ஒருநாள் ஒரு வைணவப்பிரமசாரிவந்து பிச்சைகேட்டான். விருபாக்கன் அவனுடைய ஒழுக்கம் முதலியவைகளை விசாரியாது கௌரியை விவாகஞ்செய்துகொடுத்தான். மணமகன் கௌரியைத் தன் வீட்டுக்குக்கொண்டு சென்றான். அவனுடைய தாய்தந்தை கௌரியினுடைய சிவவேடத்

தைப்பார்த்து நிந்தைசெய்து வந்தார்கள்; ஒருநாள் வீட்டைப்பூட்டிக்கொண்டு தமது உறவினருடைய கலியாணவீட்டுக்குப் போனார்கள். கௌரி தனிமையாக வெளியில் இருந்தாள்.

வீட்டிலே தனித்திருக்குங் கௌரி, சிவனடியார்களைக் காணவிரும்பி மனக்கவலை கொண்டிருந்தாள். அப்பொழுது சிவபெருமான் விபூதி உருத்திராக்கந் தரித்தவராய், வயோதிகப்பிராமண வடிவங்கொண்டு, பெரும்பசியினர்போலக் கௌரிக்கு முன்பாகவந்தார். கௌரி அன்போடு எழுந்து, ஆசனத்தில் இருத்திநமஸ்காரஞ்செய்து, கைகளைக்கூப்பி நின்றாள். வயோதிகப் பிராமணர் கௌரியை நோக்கி, "நாம் பசித்து உன்னிடத்துவந்தோம்" என்றார். கௌரி "நம்மவர்கள் வீட்டைப்பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்" என்றாள். விருத்தப்பிராமணர் "உன்கையினாலே தொடுமுன் கதவு திறபடும்; விரைவாகச் சமையல்செய்குதி" என்றார். கௌரி அப்படியே கதவைத்திறந்து, மடைப்பள்ளியினுள்ளே போய்ச் சமையல்செய்தாள். பின்பு புறத்தேவந்து அவரை ஆசனத்திலிருத்திப் பூசித்து, இன்சொற்களைச்சொல்லித் திருவமுது செய்வித்தாள்.

விருத்தப்பிராமணர், திருவமுதுசெய்த உடனே பதினாறுவயசுள்ள ஒரு காளைவடிவங்கொண்டிருந்தார். கௌரி அதுகண்டு நாணி ஒருபுறத்தே ஒதுங்கிநின்றாள். அப்பொழுது உறவினரது விவாகத்தின்பொருட்டுப் போயிருந்த வைணவர்கள் திரும்பிவந்து, வீட்டிற் புகுந்தார்கள். காளைவடிவினராய் இருந்த கடவுள் விபூதிஅணிந்த ஒரு குழந்தை வடிவுகொண்டு, கண்ணீர்வர வாய்விட்டழுதுகொண்டு, வஸ்திரத்தின்மீது கிடந்தார். கௌரியினுடைய மாமி "இக்குழந்தை யார்" என்று மருமகளைக்கேட்டாள். கௌரி "தத்தனுடைய மனைவி, இக்குழந்தையைச் சிறிதுநேரம்பார்த்துக்கொள்

என்று வைத்துவிட்டுப்போனாள்'' என்றாள். என்று சொல்லுவதற்கு முன்னரே மாமனும் மாமியும் கோபித்து, "சுடுகாட்டிலே ஆடுகின்ற சிவனிடத்தே அன்புள்ளவனுடைய குழந்தைமீது விருப்பமுடையையாய் இருக்கின்றாய், ஆகையால் நீ குழந்தையையுங்கொண்டு வீட்டைவிட்டுப்போ" என்று துரத்தினார்கள்.

கௌரி பிள்ளையினுடைய முகத்தைப் பார்த்து, தெருவிலே நின்று தளர்ந்து, சோமசுந்தரக்கடவுளையும் அம்மையாரையுந் தியானித்தாள். உடனே அக்குழந்தை இடபவாகனத்திலே சிவபெருமானாய்த் தோன்றக்கண்டாள். சிவபெருமான் அக்கௌரியை உமாதேவியின் வடிவாக்கிப் பலருங்கண்டுவணங்க அழைத்துச் சென்றருளினார். பூமியிலுள்ளோர் களிப்புற்று அதிசயித்தார்கள்.

---

## உஉ. அருணகிரிநாதசுவாமிகள்.

திருவண்ணாமலை என்னுந் திருப்பதியிலே உருத்திரகணிகையர் குலத்திலே, முத்தம்மை என்னும் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அப்பதியிலுள்ள சிவத்தலத்திலே தொண்டுகளைச் செய்பவள். உலகமுய்யும்பொருட்டு அவளிடத்திலே ஒரு புத்திரர் அவதரித்தார். அவள் தான் தொண்டுசெய்துவரும் கடவுளுக்குரிய அருணகிரிநாதர் என்னுந் திருநாமத்தையே தனது புத்திரருக்கு வைத்து வளர்த்து வந்தாள். அவர் சிறுவராயிருக்குங் காலத்திலேயே தாய் இறந்தனள்.

அருணகிரிநாதர் சுப்பிரமணியக்கடவுளுடைய திருவருட் பிரசாதத்தினாலே அப்பெருமான்மேல் திருப்புகழ் பாடிவருவாராயினர். பழனி திருப்பரங்குன்று திருவண்ணாமலை கதிர்காமம் முதலிய பலதலங்கள் சுவாமிகளால் திருப்புகழ்ப்பாமாலை சூடப்பட்டன. மெய்

யன்புடன் ஓதுவாருக்கு அழியாத பேரின்பவாழ்வைக் கொடுக்கும் திருப்புகழைக் கேட்டுப் பலர் அவருக்குச் சீஷராயினர். நோயாளர் பலர் அவருடைய திருவருளினாலே சுகமடைந்தார்கள்.



அருணகிரிநாத சுவாமிகள் இப்படி இருக்குங் காலத்திலே, தமிழ் சம்ஸ்கிருதம் என்னும் இரண்டு பாஷையிலும் வல்லவரும் பாரதத்தைத் தமிழிலேபாடியவருமாகிய வில்லிபுத்தூராழ்வார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் பலஊர்களிலும்சென்று, அங்கேயுள்ள புலவர்களைத் தருக்கத்தில் தோற்கச்செய்து, தாம் வைத்திருந்த துறட்டினாலே அவர்களுடைய காதை இழுத்துப் பிடித்து அரியும் வழக்கமுடையவர். அவர் அருணகிரிநாதரையும் தருக்கத்துக்கு அழைத்தார். தருக்கசபையில் ஒருவர் பாடுஞ்செய்யுளுக்கு மற்றவர் பொருள் சொல்லுவதென்றும் சொல்லாதோர் தோற்றவராவர் என்றும் நிச்சயித்தனர். அருணகிரிநாதர் கந்தரந்தாதி என்னும் நூலைப்பாடினார். வில்லிபுத்தூரர் ஐம்பத்துமூன்றுஞ் செய்யுள் முடியும்வரையும் பொருள்சொல்லிவந்தார். அருணகிரிநாதர் அடுத்த செய்யுளைத் தகரமெய்யொன்றேயன்றி வேறொருமெய்யுங் கலவாது பாடினார். வில்லிபுத்தூரர் பொருள்சொல்ல மாட்டாது வெட்கமுற்று, தாம் வைத்திருந்த துறட்டுக்கோலை எறிந்தார். அருணகிரிநாதர் "புலவர்களை அவமதித்தல் கூடாது" என்று அவருக்குப் புத்திபுகட்டி மிகுதிச் செய்யுளையும் பாடி அந்தாதியை முடித்தார்.

அரசன் ஒருவன் சம்பந்தாண்டான் என்பவனுடைய ஏவுதலினாலே, தேவலோகத்திலுள்ள கற்பகமலரைக் கொண்டுவந்து தரும்படி அருணகிரிநாதரை

வேண்டினன். அவர் அதற்குடன்பட்டு, திருவண்ணு மலைக் கோயிற்கோபுரத்திலே தமது உடலைவைத்து விட்டு, கிளிவடிவுடன் தேவலோகம்சென்ருர். சென்று கற்பகமலரைக் கொய்துகொண்டு திரும்பினர்.

இதற்கிடையில் சம்பந்தாண்டான், "அருணகிரியார் மலரைக்கொண்டுவர இயலாது இறந்துவிட்டார்" என்று சொல்லி, அவருடையதேகத்தைத் தகனம் செய்வித்தான். சுவர்க்கத்தினின்றும் திரும்பிவந்த சுவாமிகள், தமதுதேகம் தகிக்கப்பட்டதை அறிந்து, கிளியுருவத்துடனே அக்கோபுரத்தில் இருந்தார். அவர் கொண்டுவந்த மலரின்மணம் ஊர்முழுவதும் பரவிற்று. அரசன் அதனையறிந்து உடம்பைத் தகனம்செய்வித்த தற்காகத் துக்கித்து, அவர்முன்னிலையிலே புலம்பினின்ருன்.

அருணகிரிநாதர் அரசனைநோக்கி "நீ துன்பமடையாதே; மானுடதேகத்தில் இதுவே நமக்குச்சுகத்தைத்தருகின்றது" என்றுசொல்லி, அவனைத்தேற்றி அனுப்பினர்.

அருணகிரிநாதசுவாமிகள் பின் பலகாலம் இருந்து தோத்திரங்களைப்பாடிச் சுப்பிரமணிய சுவாமியின்து பேரானந்தப் பெருவாழ்வைப்பெற்ருர். **கந்தரலங்காரம் கந்தரனுபூதி** முதலிய திவ்வியப்பிரபந்தங்களும் அவராலேயே பாடியருளப்பட்டன.

---

## உ௯, காரைக்காலம்மையார்.

காரைக்கால் என்னும் ஊரிலே, தனதத்தன் என்னும் வைசியன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியார் என்கின்ற புத்திரியார் பிறந்தார். தனதத்தன் அவரை நாகபட்டணத்தில் இருக்கின்ற பரமதத்தனுக்கு விவாகஞ் செய்துகொடுத்தான். பரமதத்தன் காரைக்காலிலேயேஇருந்து இல்லறத்தைநடாத்தி

வந்தான். புனிதவதியார் வாழ்க்கைக்கு வேண்டுவன வற்றைத் தவருது நடத்திக்கொண்டுவந்தார். சிவன டியார்கள் வரின் அவர்களை அமுதுசெய்விப்பார். அவ ரவர்கள் விரும்பியபடி வஸ்திரம் முதலியவற்றைக் கொ டுப்பார்.

ஒருநாள் சிலர் பரமதத்தனுக்கு இரண்டு மாம் பழம் கொடுத்தார்கள். அவன் அப்பழங்களை மனை வியாரிடத்துக்கு அனுப்பிவிட்டான். சிவனடியார் ஒரு வர் பசியினல் வருந்தி அவர் வீட்டிற்சென்ருர். புனித வதியார் அத்தொண்டருடைய நிலையைக் கண்டு போசனபாத்திரத்தை வைத்துச் சோறுபடைத்தார். அந்தநேரத்திலே கறியமுதுபாகம் பண்ணப்படவில்லை. அதனல் தம்முடையகணவன் அனுப்பிய இரண்டு மாம் பழங்களில் ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து படைத்து அடியாரை அமுது செய்வித்தார். அச்சிவனடியார் சோற்றை மாம்பழத்தோடு உண்டு, சந்தோஷமடை ந்து சென்ருர்.

சென்றபின், பரமதத்தன் வீட்டுக்குவந்து போச னஞ்செய்தான். அப்பொழுது மனைவியார் எஞ்சியிரு ந்த மாங்கனியைக்கொண்டுவந்து படைத்தார். பரமத த்தன் அந்த மதுரமுள்ள மாங்கனியையுண்டு, திருப்தி யடையாமல் "மற்றக்கனியையுங் கொண்டுவந்து வை" என்ருன்.

புனிதவதியார் பழத்தைக்கொண்டுவரச் செல்ப வர்போலப்போய்ச் சிவபெருமானைத் தியானித்தார். உடனே புனிதவதியாருடைய கரத்தில் ஒரு மாம்பழம் வந்திருந்தது. அவர் அப்பழத்தைக்கொண்டுவந்து படைத்தார். அவன் அதை உண்டான். அதன்சுவை அமிர்தத்திலும் மேற்பட்டிருந்தது. அதனல் அவன் புனி தவதியாரைப் பார்த்து "இது நான் முன் தந்த பழ மன்று; இதனை நீ எங்கே பெற்ருய்" என்ருன்.

"நீர் தந்த பழங்களுள் ஒன்றைச் சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டேன்; சிவபெருமானுடைய கிருபையினாலே இப்பழம் என்கையில் வந்தது" என்றார். பரமதத்தன் அதைநம்பாது "இன்னும் ஒருபழம் அவருடையகிருபையினாலே அழைத்துத்தா" என்றான். புனிதவதியார் அவ்விடத்தை விட்டுப்போய், பரமசிவனைத் துதித்தார். சுவாமியினுடைய திருவருளினாலே ஒரு மாங்கனி அவருடைய கையில் வந்து இருந்தது. பரமதத்தன் அதை ஆச்சரியப்பட்டுவாங்கினான். வாங்கியபழம் உடனே மறைந்துவிட்டது. அவன் பயந்து அன்று முதல் அந்தப்புனிதவதியாரைத் தெய்வமென்று நினைத்து ஒழுகினான்.

இவ்விதம் ஒழுகிய பரமதத்தன் ஒரு நகரத்தையடைந்து ஒருபெண்ணை விவாகஞ்செய்து பெருஞ் செல்வனாய் வாழ்ந்திருந்தான். அவள் வயிற்றிலே ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் புனிதவதியார் என்று பெயரிட்டான். புனிதவதியாருடைய சுற்றத்தார்கள், பரமதத்தன் பாண்டிநாட்டில் இருப்பதைக் கேள்விப்பட்டு, அவரை அவனிடம் அழைத்துக்கொண்டு சென்று, அவன் வசிக்கின்ற நகரத்தைச் சமீபித்தார்கள். பரமதத்தன் இதனை அறிந்து புனிதவதியாரிடம் வந்து, அவருடைய பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்தான். புனிதவதியார் அச்சத்தோடு ஒதுங்கினின்றார்.

சுற்றத்தவர்கள் பரமதத்தனை நோக்கி, "நீ உனது மனைவியை வணங்குவது என்ன காரணம்" என்று கேட்டார்கள். பரமதத்தன் அவர்களைப் பார்த்து, "இவர் தெய்வப்பெண்ணாயிருத்தலை நான் அறிந்து, இவரைப் பிரிந்தேன்; நான் இவரைத் தெய்வமென்று கொண்டமையால் இக்குழந்தைக்கு இவருடைய பெயரையிட்டேன்; அதுபற்றியே இவருடைய பாதங்களை வணங்கினேன்; நீங்களும் இவரை வணங்குங்கள்" என்றான். சுற்றத்தார்கள் திகைத்து நின்றார்கள். புனிதவதியார் கணவன் சொல்லிய வார்த்தையைக்கேட்டு, "இவர் மனத்திற்கொண்ட எண்ணம் இது; அதனால் இவர்பொருட்டுத் தாங்கிய தசைப்பொதியை

நீக்கி, பேய்வடிவத்தைத் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அப்பொழுதே சிவபெருமானுடைய திருவருளினலே எலும்புடம்பாக, பேய்வடிவமானர். உறவினர்கள் பயந்து அவரை நமஸ்கரித்துப் போயினர்கள்.

புனிதவதியார் அற்புதத்திருவந்தாதியும் திருவிரட்டைமணிமாலையும் பாடி, திருக்கைலாசகிரியின் பக்கத்தை அடைந்தார். அங்கே கால்களினலே நடந்துசெல்வதையொழிந்து, தலையினலே நடந்து போனர். புனிதவதியார் சமீபத்தில்வந்தவுடனே சிவபெருமான் "அம்மையே" என்று அழைத்தார். புனிதவதியார் "அப்பா" என்று சொல்லிக்கொண்டு, சுவாமியை விழுந்து நமஸ்கரித்தார். சுவாமி அவரைநோக்கி "உனக்கு வேண்டும் வரம்யாது" என்று வினவியருளினர். புனிதவதியார் வணங்கி "அடியேனுக்கு இறவாத அன்புவேண்டும்; இனிப் பிறவாதிருத்தல்வேண்டும்; பிறக்கினும் தேவரீரை ஒருகாலமும் மறவாதிருத்தல் வேண்டும்; இன்னும் தேவரீர் நடனஞ்செய்யும்பொழுது பேரானந்தத்தோடு தேவரீரைப் பாடிக்கொண்டிருத்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பரமசிவன் அவரைநோக்கி "நீ தென்றிசையிலுள்ள ஆலங்காட்டிலே எம்முடைய நடனத்தைத் தரிசித்து நம்மைப் பாடிக்கொண்டிரு" என்று கூறியருளினர்.

காரைக்காலம்மையார் பெருமானிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, திருவாலங்காட்டுக்குத் தலையினல் நடந்துசென்றார். அங்கே திருநடனத்தைத் தரிசித்து, திருப்பதிகத்தைப் பாடினர். அவர் சுவாமியினுடைய திருவடியின்கீழே சிவானந்தத்தை அநுபவித்துக் கொண்டு எக்காலமும் இருக்கிறார்.

---

## உச. பெரியோரைச் சேவித்தல்.

பெரியோர்கள் தகப்பன், தாய், பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன், தமையன் மனைவி, சிவனடியார், குரு, குருபத்தினி, உபாத்தியாயர் முதலாயினோர்களாம்.

அவர்கள் வரின் எழுந்து அச்சத்தோடும் அன்போடும் வந்தனஞ்செய்தல்வேண்டும். பெரியோர்களை வணங்குபவன் பூரணவயசையும் கல்வியையும் கீர்த்தி முதலியவற்றையும் அடைவான். பெரியோர் யாது குற்றஞ் செய்யினும் அதனைப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும். அவர்கள் ஏவும் பணிவிடைகளைக் கூச்சமின்றிச் செய்தல்வேண்டும். நல்லொழுக்கம் முதலியவற்றுக்கு மாறாகச் சொல்வார்களாயின் அதனை மறுத்தல் பாவமாகாது.

பெரியோர்முன் கடுஞ்சொற்களைச் சொல்லுதலும், அவர்களை நிந்தித்தலும் பாவமாகும். அவர்களிடத்தில் ஒரு பொருளை ஏற்கும்பொழுது இரண்டு கரங்களாலும் ஏற்றல்வேண்டும். கொடுக்கும்பொழுதும் இருகரங்களாலும் கொடுத்தல்வேண்டும். அவர்களுடன் சமமான ஆசனத்தில் இருத்தல் ஆகாது.

பிதாமாதாமுதலாயினோருக்கு அன்னவஸ்திரங் கொடுத்து எந்நாளும் பாதுகாத்தல் வேண்டும். அவர்களுக்கு நோய்வந்தால் வைத்தியரைக்கொண்டு மருந்து செய்வித்தல்வேண்டும். அவர்கள் இறக்கும் பொழுது, அவர்மனம் சிவபெருமானுடைய திருவடிகளிலே அழுந்தும்படி தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களை ஓதுவித்தல்வேண்டும். அவர் இறந்தபின்பு அபரக்கிரியைகளை விதிப்படி சிரத்தையோடு செய்துமுடித்தல் வேண்டும். வருடந்தோறும் அவர் இறந்ததிதியில் சிராத்தம் தவறாமற் செய்தல்வேண்டும். புரட்டாதி மாதத்தில் மகாளயஞ்செய்தல்வேண்டும்.

வருடப்பிறப்பு முதலிய விசேஷகாலங்களில் குருவையும் உபாத்தியாயரையும் மற்றைபெரியோர்களையுந் தரிசித்தல்வேண்டும். குருவையும் சிவபத்தரையும் மனிதரென்று நினையாது, சிவபெருமானென நினைத்து விசுவாசத்தோடு வழிபடல்வேண்டும். அவர்கள் தம் வீட்டுக்குவரின், எழுந்து கைகளைக்கூப்பி நமஸ்கரித்து, அழைத்துக்கொண்டுவந்து ஆசனத்திலிருத்தி நமஸ்கரித்து, விபூதிவாங்கித்தரித்துக்கொண்டு, மீண்டும் நமஸ்கரித்து, அவர் "இரு" என்றபின் இருத்

தல்வேண்டும். அவர்போம்பொழுது அவருக்குப்பின் பதினென்சுடிபோய் வழிவிடல்வேண்டும். கிழக்கினும் வடக்கினும் கால்நீட்டி நமஸ்கரித்தல் ஆகாது. அவர்கள் கிடக்கும்போதும், பத்திரபுஷ்பம் எடுக்கும்போதும், ஸ்நானம் சந்தியாவந்தனம் முதலியன பண்ணும்போதும் நமஸ்கரித்தல்ஆகாது.

தீக்ஷைசெய்த குரு, உபாத்தியாயர் முதலிய பெரியோர்கள் திருமுகம் அனுப்பினல், அதைப்பீடத்தின்மீதுவைத்து, நமஸ்காரஞ்செய்து, இரண்டுகைகளினுலும் எடுத்து, இரண்டுகண்களிலும் ஒற்றிச் சிரசின்மேல்வைத்துப் பின்பு வாசித்தல்வேண்டும். ஆசாரியருடையமனைவியை உமாதேவியாரூப்பாவித்து வணங்கல்வேண்டும். அவருடையபுத்திரரை விநாயகக்கடவுளும், சுப்பிரமணியக்கடவுளுமாகப் பாவித்து வணங்கல்வேண்டும். ஆசாரியர் சிவபதமடைந்த திதியிலாவது நக்ஷத்திரத்திலாவது அவரைக்குறித்துக் குருபூசை செய்தல் வேண்டும்.

---

## உரு. சிவத்துரோகம்.

சிவபெருமானை நிந்தித்தலும், குருவையும் சிவனடியார்களையும் பகைத்து, அவர்களை நிந்தித்தலும், வேதாகமங்களை நிந்தித்தலும், ஆலயத்துக்குரிய பொருள்களைக் கவருதலும், ஆலயம் திருக்குளம் சைவ வித்தியாசாலை முதலியவைகளுக்கு அழிவுசெய்தலும் சிவத்துரோகங்களாம். சிவத்துரோகங்களைச் செய்தவர் சிவபிரானலே தப்பாது தண்டிக்கப்படுவர்.

கௌடதேசத்திலே, நிதிவிரதன் என்னும் பெயரையுடைய ஓர் வணிகன் இருந்தான். அவன் சூரிய பூசைக்காக ஒருமண்டபம் கட்டநினைத்தான். தற்புருஷ சிவாசாரியாரிடத்திலே செங்கற்கள் இருப்பதாக அறிந்து, அவரிடம் சென்று அவைகளைவிலைக்குத் தரும்படி கேட்டான். சிவாசாரியர் அதற்கு உடன்படவில்லை. நிதிவிரதன் திரும்பிவரும்பொழுது அரசனுடைய வைத்தியனைக் கண்டான். அவன் தான் குருவிடம் போனதைப்பற்றி வைத்தியனுக்குச் சொன்னன்.

வைத்தியன் ஆசாரியரை அடைந்து, செங்கற்களைக் கொடுக்கும்படி கேட்டான். ஆசாரியர் அதற்கு மறுத்தார். வைத்தியன் வணிகனிடம்போய், “நீ துன்பப்பட வேண்டாம். நாளைக்குக் குருவினுடைய செங்கற்கள் கொள்ளைபோகும்” என்று சொல்லிச் சென்றான்.

அத்தினம் அரசனுடைய பட்டத்து யானைக்கு ஒரு நோய்உண்டாயது. அன்றிரவு யானைப்பாகர்கள் அரசனுடைய உத்தரவின்படி வைத்தியனைக் கொண்டுவந்து காட்டினார்கள். வைத்தியன் “மருந்து செய்வதற்குச் செங்கல் கொண்டுவாருங்கள்” என்று சொன்னான். பாகர்கள் “இவ்விரவில் செங்கல் எங்கே எடுக்கலாம்” என்று யோசித்தார்கள். வைத்தியன் “செங்கற்கள் எமது குருவின் மடத்தில் இருக்கின்றன” என்று சொன்னான். பாகர்கள் சென்று செங்கற்களை முற்றாய் எடுத்துக்கொண்டுவந்தார்கள். வைத்தியன் அவைகளை முற்றாக இடிப்பித்து, அப்பொடியோடு சொற்பமருந்துஞ்சேர்த்து, யானைக்குப் பூசினான். நோய் சுகப்படவில்லை. யானை இறந்துவிட்டது. அரசன் துக்கத்துடன் இருந்தான்.

மறுநாள், தற்புருஷசிவாசாரியர் அரசசபைக்கு வந்தார். அரசன் ஆசாரியரை நமஸ்காரஞ்செய்து, ஆசனத்தில் இருத்தினான் குரு அரசனைநோக்கி, செங்கல் எடுக்கப்பட்ட செய்தியை முற்றாகச் சொன்னார். அதைக்கேட்ட வேந்தன் தூதரை அனுப்பி அவ்வணிகனை அழைப்பித்தான். ஏவற்காரரைநோக்கி, இவனை வெட்டுங்கள்” என்று கட்டளைசெய்தான். அரசன் வைத்தியனை அழைப்பித்து, பெருங்கோபத்துடன் அவனைப்பார்த்து “எங்கள் சிவபெருமானுக்குப் பூசைசெய்கின்ற குருவினுடைய செங்கற்களை அழித்தாய்; யானைக்கு வந்தநோய் செங்கற்பொடியால் தீருமா? நீ வணிகனுக்காகக் குருவினுடன் பகைகொண்டு, இப்படிச்செய்தாய்” என்றுசொன்னான். பின்பு ஏவலாளரைநோக்கி “இவனைத் தண்டியுங்கள்” என்று கட்டளையிட்டான். அவர்கள் அவ்விதஞ்செய்தார்கள்.

அதன்பின்னர் அரசன் பொன்னாற் கற்கள் செய்வித்து ஆசாரியருக்குக் கொடுத்து “ஸ்வாமீ! போக

லாம்" என்றுசொல்லி அன்புடன்வணங்கினான். தேவர்கள் அங்கே வந்து அரசனைப் புகழ்ந்தார்கள். பிரமாவும் விட்டுணுவும் அங்கேவந்து, அரசன் விரும்பியவரங்களைக் கொடுத்து மறைந்தார்கள். வணிகனும் வைத்தியனும் செங்கற்களை எடுத்தமையினால் நகரத்துன்பத்தை அனுபவித்தார்கள்.

---

## உ௪. தருமம்.

தருமமாவது வேதாமங்களிலே விலக்கியபாவங்களை ஒழித்து விதித்த புண்ணியங்களைச் செய்தல். பாவங்களாவன: கொலை, களவு, கள்ளுக்குடித்தல், மாமிசம்புசித்தல், பொய்சொல்லல் முதலியவைகளாம். புண்ணியங்களாவன: கடவுளை வழிபடுதல், பெரியோர்களை வணங்குதல், உண்மை பேசுதல், முதலியவைகளாம்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு மனிதசரீரத்தைக் கொடுத்தது, தருமங்களைச்செய்து தம்மைவழிபட்டு முத்தியடைதற்பொருட்டேயாம்.

பாவஞ்செய்தவர்கள் நரகத்திலே விழுந்து துன்பத்தை அனுபவிப்பார்கள். புண்ணியஞ்செய்தவர்கள் உயிரோடிருக்கும் பொழுது இன்பத்தை அனுபவிப்பார்கள். இறந்தபின் சுவர்க்கம்முதலிய உலகங்களை அடைந்து இன்பத்தை அனுபவித்து மோட்சத்தை அடைவர்.

உலகத்திலே ஒருவன் வண்டியில் ஏறிச்செல்லவும், மற்றவன் இழுத்துக்கொண்டு செல்லவுங் காண்கிறோம். இதனாலே வண்டியில் ஏறிச் செல்பவன் தருமங்களைச் செய்தவன் என்பதும், இழுத்துச்செல்பவன் பாவங்களைச்செய்தவன் என்பதும் பெறப்படுகின்றன.

ஒருவன் இறக்கும்பொழுது அவனுக்குத் தாய்தகப்பன் முதலியவரேனும், அவனுடைய திரவியங்களேனும் துணையாதலும் இல்லை; உடன் செல்லுதலும் இல்லை. அவன் செய்த தருமமே துணையாக உடன்செல்லும். ஆதலினாலே தருமத்தை நாடோறும் செய்தல்வேண்டும்.

பொருளினாலே ஆவசியமாகச் செய்யவேண்டிய உத்தமதருமங்கள் சிலவற்றைக் கூறுவாம்:—

அழிந்துகிடக்கும் பழைய தேவாலயங்களை முன் போலக்கட்டுவித்தல் மிக மேலான புண்ணியமாகும். பழுதடைந்த ஆலயங்களைப் புதுக்குவித்தல் வேண்டும். பூசை உற்சவம் முதலியன நடவாதிருக்கும் ஆலயங்களில் ஆகமவிதிப்படி பூசை உற்சவம் முதலியவைகளைச் செய்வித்தல் வேண்டும். திருக்கோபுரம் முதலியவைகளில் அரசுமுதலியவைகள் முளைத்தால் அவைகளை வேருடன்களைந்து அவ்விடத்துக்குச் சுண்ணம்பு பூசுதல் வேண்டும்.

சைவவித்தியாசாலைகளைத் தாபித்து, பிள்ளைகளுக்குக்கருவிநூல்களையும், லௌகிகநூல்களையும், சமயநூல்களையும் படிப்பித்தல் வேண்டும். கல்வியில் விருப்பமுள்ள வறியபிள்ளைகளுக்கு அன்னமும், வஸ்திரமும், புத்தகமுங் கொடுத்தல் வேண்டும். பரீக்ஷையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்குப் பரிசுகொடுத்தல் வேண்டும்.

குருடர், முடவர், சிறுகுழந்தைகள், நோயாளர், வயோதிகர், வறியவர் என்னும் இவர்களுக்கு அன்னங் கொடுத்தல் வேண்டும். கடவுளுக்குத் திருத்தொண்டு செய்பவருக்குங் கொடுத்தல் வேண்டும். வியாதியாளர்களுள் வறியவர்களுக்கு மருந்து செய்வித்தல்வேண்டும்.

தேவபூசைக்கு உபயோகமாகும் பொருட்டுத் திருநந்தனவனம் வைத்தல்வேண்டும். குளந்தோண்டுவித்தல் வேண்டும். குளக் கரையிலே பூசைமண்டபம் கட்டுவித்தல்வேண்டும். வழிகளிலே தண்ணீர்ப் பந்தர்கள் வைத்தல் வேண்டும். அநாதப்பிள்ளைகளை வளர்த்துக் கல்வி கற்பித்தல்வேண்டும். இவை முதலியன உத்தம தருமங்களாம்.

ஆன்மாக்கள் தருமங்களைச்செய்து உய்யவேண்டும். என்னுங் கிருபையினாலே, காஞ்சீபுரத்திலே காமாட்சி அம்மையார் சிவபெருமானது இடப்பாகத்தில் இருந்து முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்து அருளுகின்றார்.

---

## உஎ. ஆறுமுகநாவலர்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே, கார்காத்த வேளாளர் வருணத்திலே ஞானப்பிரகாச சுவாமிகளது மரபிலே ஆறுமுகநாவலர் அவதாரஞ்செய்தார். இவர் சரவணமுத்துப்புலவர் சேனாதிராயர் முதலிய வித்துவான்களிடத்திலே கல்விகற்றுவந்தார். இவருடைய கல்வித் திறமையைக்கண்ட உபாத்தியாயர்கள் இவரிடத்திலே மிகப் பிரீதியுடையவர்களாயினர். இவர் இங்கிலீஷ் படித்து அதினும் சமர்த்தராயினர். சைவசித்தாந்த சாஸ்திரங்களையும், தேவார திருவாசகங்களையும் தாமே கற்றுப் பாண்டித்தியம் அடைந்தார். சம்ஸ்கிருதநூல்களைப்படித்து அவற்றிலும் வல்லவராயினர்.

நாவலர் பிள்ளைகளுக்குப் படிப்பித்தால் உலகத்துக்கு நன்மை உண்டாகும்என்று எண்ணி, சதாசிவம்பிள்ளை, நடராசஐயர், ஆறுமுகத்தம்பிரான், செந்திநாதையர், வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை, கைலாசபிள்ளை முதலிய நன்மாணுக்கர்களுக்குப் படிப்பித்தார்.

இவருக்குச் சமயத்தை வளர்க்கவேண்டும் என்னும் ஆசை சிறுவயதிலே உண்டாயது. இவர் சைவத்தை வளர்த்தற்குப் பிரசங்கம் முக்கியமானவழி என்பதை உணர்ந்து பிரசங்கமழை பொழிந்துவந்தார். இவருடைய பிரசங்கங்களைக் கேட்டவர்களுள் மதுபானம் மாமிசபோசனம்செய்த அநேகர் மதுபானமும் மாமிசபோசனமும் செய்யாது விட்டார்கள். தீக்ஷைபெற்று, சந்தியாவந்தனஞ் செய்யாத அநேகர் மீட்டும் தீக்ஷை கேட்டு, சந்தியாவந்தனஞ் செய்தார்கள். ஆலயதரிசனஞ் செய்யாத அநேகர் ஆலயதரிசனஞ் செய்தார்கள். சைவநூல்களை இகழ்ந்து, பாதிரிமார்களை விசுவசித்த அனேகர் சைவநூல்களின் உண்மைகளை அறிந்துகொண்டார்கள். இப்படியே நாவலருடைய பிரசங்கத்தினால் தமிழ்நாடு அடைந்த நன்மைகள் அளவில்லாதன.

திருவாவடுதுறை ஆதீனத்துக் குருமூர்த்திகள் இவருடைய வாக்குவல்லபத்தைக் கண்டு, இவருக்கு நாவலர் என்னும் பட்டத்தைச் சூட்டினார்கள். நாவலர் புராணத்துக்கு அர்த்தஞ்செய்யும் சிறப்பு எவருடைய மனதையும் கசிந்துருகச் செய்யும்.

நாவலர் அவர்களுக்குச் சைவ வித்தியாசாலை வைத்துப் படிப்பிக்கவேண்டும் என்னும் ஆசை முறுகி வளர, வண்ணார்பண்ணையிலும் சிதம்பரத்திலும் வித்தியாசாலைகளைத் தாபித்தார். அவைகள் இப்பொழுதும் நடைபெற்று வருகின்றன. இவருடைய முயற்சியால் தொடங்கப்பட்ட வித்தியாசாலைகள் இன்னும் பல.

யாழ்ப்பாணம் சிறியநாடாயிருந்தாலும், பாதிரிமார்கள் இங்கே வந்துசேர்ந்து, தமது சமயத்தைப் பரப்புதற்கு அனேக போதகர்களையும் போதகிகளையும் நியமித்தார்கள். பாதிரிமார் தமது சமயத்தைப் போதித்தலிலும், சைவசமயத்தை இகழ்தலிலுமே தமது கருத்தைச் செலுத்தினார்கள். அநேகர் அவர்களது போதனையில் மயங்கி, அவர்கள் வசமாயினார்கள். அவர்களது தந்திரங்களைச் சகிக்கலாற்றாது, தமது பிரசங்கங்களிலும், எழுத்துமூலமாகவும், கிறிஸ்துமத குற்றங்களையெல்லாம் அஞ்சாநெஞ்சோடு எடுத்துக் காட்டுவர். சைவதூஷணபரிகாரம் முதலிய கிறிஸ்துமத கண்டன நூல்களையும் எழுதி அச்சிட்டார். சம்ஸ்கிருதத்திலும் செந்தமிழிலுமுள்ள இலக்கிய லக்கணங்களையும், ஆகம சித்தாந்த தருக்கநூல்களையும் நன்கு கற்ற நீர்வேலிச் சங்கரபண்டிதரும் இவரோடு சேர்ந்து கிறிஸ்துமத கண்டனமுதலிய நூல்களைச் செய்தார். இவர்கள் அவதாரம் செய்யாவிடின் யாழ்ப்பாணம் முழுவதும் இப்பொழுது கிறிஸ்தவ நாடாக இருக்கும்.

நாவலர் வசனரூபமாகப் பலநூல்களை எழுதினார். தாம்எழுதிய சைவவினாவிடை பெரியபுராண வசனம் முதலிய நூல்களைத் தமது அச்சுக்கூடத்தில் அச்சிட்டு, சைவர்கள் ஈடேறும்படி உதவினார். பல நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டார். இவர் தாம் வித்துவானாயிருந்ததேயன்றி, பிரபுவாயும் இருந்ததினால் நந்த

ஞர் முதலிய அடியவர்கள்மேலும் சுவாமிமேலும் பாடிக் கொண்டுவந்த கோபாலகிருஷ்ண ஐயர் முதலானவர்களுக்குக் கொடுத்த பரிசுகள் பல.

நாவலர் சிறுவயசிலேயே சமயதீக்ஷை பெற்றார். பின்பு விசேஷதீக்ஷையும் நிருவாணதீக்ஷையும் பெற்றுக்கொண்டார். நைட்டிகப்பிரமசரியத்தில் சிறிதும் வழுவாது ஒழுகிவந்தார். சிவபூசையேயன்றிச் சமயாசாரியர்களது குருபூசையையும் கிரமமாகச் செய்துவந்தார். சிவராத்திரி கந்தசட்டி முதலிய விரதங்களையும் அனுட்டித்து வந்தார். தகப்பனார் தாயார் என்னும் இருவருடைய வருஷ சிராத்தங்களையும் சிரத்தையோடு செய்து வந்தார். காமம் களவு வஞ்சனை முதலிய துர்க்குணங்கள் இவரிடத்தில் எள்ளளவும் இருந்ததில்லை.

தமிழ்நாட்டார் சைவசமயமே உண்மைச் சமயமென அறிந்துய்யத் தோன்றிய நாவலர்பெருமான் தமது ருள வயதிலே சிவபெருமானது பாதநீழலை அடைந்தார்.

---

## உஅ. சரீராரோக்கியம்.

சூரியன் உதிக்குமுன் நித்திரைவிட்டு எழுந்தால், நல்லபுத்தியுண்டாகும். நரம்புகள் பெலனடையும். காலையிலே தேகாப்பியாசஞ்செய்வதனால் சரீரம் திறகும்.

காலை மாலைகளில் மலசலாதிகளை ஒழுங்காக மோசனஞ்செய்துகொண்டுவந்தால், ஆரோக்கியம் உண்டாகும். மலசலங்களை அடக்கினால் நோயுண்டாகும்.

பல்லின் உள்ளையும் புறத்தையும் செவ்வையாக விளக்கினால் பல்லிலும் அதன்வேரிலும் ரோகங்கள் உண்டாகாவாம்.

சரீரத்தில் உள்ள மயிர்த்துவாரங்கள் வழியாகச் செல்லும் அழுக்கு, இரத்தத்தினின்று வெளிப்படும் பொருட்டு ஒவ்வொருநாளும் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் பண்ணுதல் வேண்டும். காலையிற் செய்யும் ஸ்நானத்தால் சரீர ஆரோக்கியமும் பசியும் உண்

டாம். சூரியகிரணம் படாதநீரும், பாசிநீரும், இலை உதிர்ந்தநீரும் வியாதிகளை உண்டாக்குவதனால், ஸ்நானம் பானம் முதலியவைகளுக்கு ஆகாவாம். ஸ்நானம் செய்தவுடன் உடம்பிலே ஈரம் இல்லாமல் நன்ருகத்துடைத்தல் வேண்டும். ஈரம் சுவறினல் குளிர் உண்டாகும். அதனல் நோயுண்டாகும்.

உடுக்கிற வஸ்திரமும் சயனிக்கிற படுக்கையும் சுத்தமாய் இருத்தல்வேண்டும். உடம்பினின்றும் வெளிப்படும் அழுக்கு, வஸ்திரம் தலையணை முதலியவைகளில் ஒட்டிக்கொள்ளும். அவ்வஸ்திரம் முதலியன தோலோடு சம்பந்தப்படும் பொழுது, அவைகளிற் படிந்திருந்த அழுக்கு, மயிர்த்துவாரங்களிற் செறிந்து வியாதியை உண்டாக்கும். தலையணை முதலியவைகளை எப்பொழுதும் காற்றிலே போடவேண்டும்.

சீரணமாகுமுன் புசித்தல் ஆகாது. புசித்தால், பக்குவாசயத்திலே சிறிது சீரணமான போசனம், பின்பு புசித்த உணவோடு கலந்து வியாதியை உண்டாக்கும். அளவுக்குமேற்படப் புசித்தலும் குறைவாகப்புசித்தலும் ஆகாவாம். நன்ருகச் சமையாத அன்னமும், குழைந்த அன்னமும், ஊறிய அன்னமும், பழங்கறியும் புசித்தலாகாது. போசன முடிவிலே மோர்ச்சாதத்தோடும், தயிர்ச் சாதத்தோடும் ஊறுகாய் சேர்த்துக் கொள்ளல்வேண்டும். புளித்த தயிருடன் புசித்தால் முன்னுண்ட எல்லாப்பதார்த்தங்களையும் சீரணயாக்கும். மோருடன் புசித்தால் பசியுண்டாகும். ஊறுகாய் உதராக்கினியை வளர்க்கும். இராவிலே தயிர்ச்சாதமும் மோர்ச்சாதமும் உண்ணலாகாது. பகலிலே பாற்சாதம் புசித்தலாகாது.

இரவிலே போசனஞ்செய்து எஞ்சிய அன்னத்திலே ஆறிய வெந்நீரைவிட்டு ஒரு சுக்குத்துண்டும் போட்டு வைத்தல்வேண்டும். அப் பழஞ்சாதத்தை நீராகாரத்துடன் புசித்தால் தாகம் நீங்கும்; பசியுண்டாகும். போசனஞ் செய்தவுடனே சிறிதுதூரம் உலாவுதல்வேண்டும்.

அசுத்தவாயுவைப் பூரித்தால் சுத்தமாகிய செவ்விரத்தம் அசுத்தமாகிய காரிரத்தமாகும். காரிரத்தமாயின் வியாதியுண்டாகும். நாம் எப்பொழுதும் சுத்தவாயுவையே பூரித்தல்வேண்டும். தன்னாலும் பிறராலும் விடப்பட்டகாற்றும் அழுக்குப்பொருள்களிற் படிந்துவரும் காற்றும், நச்சுக்காற்றாகும். அசுத்தவாயு நீங்குவதற்காகவும், கிருமிகள் அழிந்து போதற்காகவும் அதிகாலையில் சாணங்கலந்த சலத்தை வீடு முற்றம் முதலிய இடங்களில் தெளித்தல்வேண்டும்.

தரைமட்டத்திற் பதிந்த அறையிலும், ஈரமுள்ள அறையிலும், இருட்டறையிலும் இருந்து வேலைசெய்பவர்கள் சரீரம்வெளுத்து, பெலவீனர்களாய் வியாதியாளராகின்றனர்.

வீடுகளும், மடைப்பள்ளிகளும், பாடசாலைகளும் சுத்தவாயு வீசத்தக்கவைகளாகவும், வெளிச்சம் உள்ளவைகளாகவும் இருத்தல் வேண்டும். தோலை ஊடுருவிச் செல்லும் ஒளி இரத்தத்தைச் சுத்தியாக்கி, அதன் வழியாக உடம்புமுழுவதும் செறியும். அதனால் சரீர ஆரோக்கியம் உண்டாகும்.

பிள்ளைகள் தலையும் தோள்களும் கூனிக்குனிந்த நிலையில் பழகுதல்கூடாது. இருக்கும்போதும், நிற்கும்போதும், படிக்கும்போதும் நிமிர்ந்த நிலையாக இருத்தல்வேண்டும். நிமிர்ந்த நிலையினால் சுவாசக் கருவிகள் நன்றாக இயங்கும். அப்பொழுது தெளிவான சத்தமுமுண்டாம்.

மனசையும் சரீரத்தையும் இளைப்பாற்றுவது நித்திரை. நித்திரைக்கு இராக்காலமே ஏற்றது. பகல் நித்திரை ரோகங்களை உண்டுபண்ணும். விடியற்காலையில் ஒருமுறைவிழித்துப் பின் செய்யும் நித்திரையினால் வியாதிஉண்டாகும். நித்திரை செய்யாமையும், குறைந்தநித்திரையும், அதிக நித்திரையும் வியாதியை உண்டாக்கும். வாரத்துக்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தல் வேண்டும். நான்கு மாதத்துக்கு ஒருமுறை பேதிமருந்து உண்ணுதல்வேண்டும்.

## ஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்
அவர்களால் எழுதி

### அச்சிடப்பெற்ற புத்தகங்கள்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| சம்ஸ்கிருதம். | | | | ரூ. ச. |
| சிவாகமசேகரம் பிரதிட்டாவிதி | | .... | விலை | 5-00 |
| பிரணயகலஹவர்ணனம் | | .... | ,, | -25 |
| தமிழ் | | | | |
| சிவபூசைவிளக்கம் | | .... | ,, | 3-00 |
| பிராசாததீபம் | .... | .... | ,, | 1-00 |
| சிவபூசைவிதி | .... | .... | ,, | -75 |
| அனுட்டான அகவல் | | .... | ,, | -25 |
| விநாயகபரத்துவம் | .... | .... | ,, | -75 |
| புவனேசுவரி மகத்துவம் | | .... | ,, | -25 |
| சைவப்பிரகாசிகை 5-ம் புத்தகம் | | .... | ,, | 1-00 |
| ,, 4-ம் ,, | | .... | ,, | -75 |
| ,, 3-ம் ,, | | .... | ,, | -60 |
| ,, 2-ம் ,, | | .... | ,, | -50 |
| ,, 1-ம் ,, | | .... | ,, | -40 |

வேண்டியவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு
எழுதிப் பெற்றுக்கொள்க.

ச. கு. வைத்தியேசுவரக்குருக்கள்
அச்சுவேலி P. O.
சிலோன்.